GOKULAM

கோகுலம்

நவம்பர் 2004

ரூ.6/-




தீபாவளி ஸ்பெஷல்

வாண்டுமாமா
எழுதும்
சித்திரக்கதை ஆரம்பம்

உங்கள் ஞாபக சக்தி எப்படி?

உங்களுக்கு ஞாபக சக்தி எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்தப் படத்தை இரண்டு நிமிடம் நன்றாக உற்றுப் பாருங்கள். பிறகு புத்தகத்தை மூடி வைத்து விட்டு உயிரினங்களின் பெயர்களை வரிசையாக எழுதுங்கள். 15 பெயர்களைச் சரியாக எழுதுபவர்கள் 'நினைவு ராஜா' பட்டம் சூட்டிக் கொள்ளுங்கள்.



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.


குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்



* ஜோக்ஸ் கார்னர் - 3
* தீபாவளிக்கு வந்த சுரடியார்! - 4
* எது அழகு? - 8
* தப்பிக்கும் மந்திரம்! - 12
* பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் - 13
* எல்லாமே அழகுதான்! - 14
* குட்டப்பனும் குட்டிச்சாத்தானும் - 20
* அம்மாவைத் தேடி... - படக்கதை - 25
* சிறுத்தைப் புலி - 32
* யாருக்கு, எத்தனைப் பட்டாசு? - விளையாட்டு - 40
* தீபாவளித் திருநாள்! - 44
* ஹியாச்சி பிசாசும் புத்திசாலி லியாங்கும் - 48
* பொள்ளாச்சி மாரியம்மாள் மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல் - 53
* பசியெடுக்கும் மருந்து! - 60
* 'புதையல் தீவு' - தொடர்கதை - 68
* கோகுலம் கேம்-ஷோ - 72
* அன்புள்ள ஜக்கு... - 76
* குழந்தை விளையாட்டு - படக்கதை - 78
* ஓவியப் போட்டி முடிவு - 80







நவம்பர் 2004 மலர் : 22 இதழ் : 10

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

தேள்களின் ராணி!

செய்தி நேரம்

கல்விக்கான செயற்கைக் கோள்

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து கல்விக்கான செயற்கைக் கோள் விண்வெளிக்கு ஏவப்பட்டது. செப்டெம்பர் 20ந்தேதி மாலை 4 மணிக்கு 'எஜுசாட்' செயற்கைக் கோளைச் சுமந்தபடி ஜி.எஸ்.எல்.வி.எஃப்-01 ராக்கெட் விண்ணிற்குச் சென்றது. தொடர்ந்து 7 ஆண்டுகள் இயங்கவல்ல இச் செயற்கைக் கோளின் எடை 1950 கிலோ. இவ்வளவு அதிக எடை கொண்ட செயற்கைக் கோளை ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் செலுத்தியுள்ளது இதுவே முதல் முறை. இது முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 39வது செயற்கைக் கோள்.



இயற்கை உரங்களுக்கு மவுசு!

இயற்கை உரங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் காய்கறிகளுக்கு சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இவ்வகை காய்கறிகளை ஏற்றுமதி செய்வதற்கு இந்தியாவுக்குப் பிரகாசமான வாய்ப்புகள் இருக்கின்றன.

தேள்களுடன் வசித்தவர்!

கண்ணாடிக் கூண்டில் 6069 தேள்களுடன் 36 நாட்கள் வாழ்ந்து சாதனை படைத்துள்ளார் நூர் மாலெனா. மலேஷியாவைச் சேர்ந்த இவர் ஏற்கெனவே ஒரு முறை இப்படி ஒரு சாதனை நிகழ்த்தி 'தேள்களின் ராணி' என்று பாராட்டப்பட்டார். இவரது சாதனையை தாய்லாந்து நாட்டுப் பெண் முறியடித்து விட, மீண்டும் அந்தப் பட்டத்தைப் பெறுவதற்கே மறுபடி தேள்களுடன் கூண்டுக்குள் சென்றார். இச்சாதனையை யாரும் எளிதில் முறியடிக்க முடியாது என்று கூறியுள்ளார் நூர் மாலெனா.

விருதுகள்!


விளையாட்டுத் துறையில் சாதனை படைத்தவர்களுக்கான மிக உயரிய விருது ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது. தடகள வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதில் பதக்கம், பாராட்டுப் பத்திரம், 5 லட்சம் ரூபாய் ஆகியவையும் அடங்கும். இது தவிர ராஜ்யவர்தன் சிங் ரதோர், கோனேரு ஹம்பி உட்பட 15 பேருக்கு அர்ஜுனா விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விருதுகளை குடியரசுத் தலைவர் வழங்கினார்.



• அஞ்சு பாபிஜார்ஜ்


கண்ணாடி எதற்கு?

ஜோக்ஸ் கார்னர்



''நான் வரும்போது ஏன் கண்ணாடி போட்டுக்கறே?''
''தலைவலி வரும்போது கண்ணாடி போடணும்னு டாக்டர் சொல்லியிருக்காறே!''

– பி. ஜெயந்தி



''பனிக்கட்டி தண்ணீராக மாறினால் என்ன ஆகும்?''
''விலை அதிகமாகும் சார்!''

- அம்பிகா
மதுரை



''ஒரு நாள் ஜெயிச்சா மறுநாள் தோத்துப் போயிடறேன்.''
''அப்படின்னா ஒரு நாள் விட்டு ஒரு நாள் விளையாடேன்!''

- எம்.ஏ.ரிஸ்னாபரகத்,
இலங்கை


''கும்பகர்ணன் மாதக் கணக்கில் தூங்கினான். அது எந்தக் காலம்?''
''கொசுவே இல்லாத காலம் சார்!''

-பி. ஜெயந்தி
ஜமுனா,
எட்டாம் வகுப்பு,
மாரியம்மாள் பெண்கள் மேல் நிலைப் பள்ளி,
பொள்ளாச்சி






தீபாவளிக்கு



வருகிறார், வருகிறார்,
'தீவிளி'க்கு வருகிறார்,
வேடிக்கை கரடியார்
விரைவாக வருகிறார்.

கோட்டு, சூட்டு, பூட்டிலே
கோணிக் கோணி நடக்கிறார்;
கூலிங் கிளாஸைக் கழற்றியே
சுட்டு விரலில் சுழற்றுறார்.

சரவெடிகள் வெடிக்கிறார்,
சிறுவர்க்கெல்லாம் கொடுக்கிறார்;
பாக்கெட்டில் உள்ள ராக்கெட்டைப்
பங்கு போட்டுத் தருகிறார்.




வந்த கரடியார்!

சக்கரத்தைக் கொளுத்தியே
சுற்றிச் சுற்றி வருகிறார்;
பூ வாணம் ஏற்றியே
பூவைப் போலச் சிரிக்கிறார்.


அழுது ஓடும் சிறுவரை
அருகழைத்து
அணைக்கிறார்;
அழுத வாயை ஒட்டவே
அல்வாத் துண்டை
அடைக்கிறார்.

கரடி வேடக் கோமாளி
கலக்கிவிட்டார் ஊரையே;
வேடிக்கை அவர் வாடிக்கை
வெடிச் சிரிப்புக் கேளிக்கை!



தவளையின்

நெட் பிட்ஸ்



விநாயகர் சதுர்த்தியின் போது விதம்விதமான விநாயகர்களைப் பார்த்திருப்பீர்கள். இதோ இந்தப் படத்தில் இருக்கும் விநாயகர் ரொம்ப வித்தியாசமானவர். காரணம், பார்ப்பதற்கு விநாயகர்போல இருந்தாலும், இது உண்மையில் விநாயகர் சிலையே அல்ல. இது ஒரு பலாப்பழம். வளைந்து, நெளிந்து இதன் உருவம் விநாயகர் போல இருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் கிடைத்த பலாப்பழம் இது.

தாஜ்மஹாலுக்கு வயது 350. உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் குறித்து சில அரிய தகவல்களைப் பார்க்கலாமா?

- இருபதாயிரம் தொழிலாளர்கள், இருபத்திஇரண்டு வருடங்கள் உழைத்து உருவாக்கியது தாஜ்மஹால் என்பது தெரியும். அந்தத் தொழிலாளர்கள் வசிப்பதற்காக அருகிலேயே ஒரு கிராமத்தை உருவாக்கினார் ஷாஜகான். அந்தக் கிராமத்துக்கு தாஜ்கஞ்ச் என்று பெயர்.
- 1830ல் ஆங்கிலேய அரசாங்கம், தாஜ்மஹாலை இடித்து அதில் இருக்கும் சலவைக் கற்களை லண்டனுக்கு கப்பல் மூலம் எடுத்துச் சென்று ஏலம் விட முடிவு செய்தது. ஆனால், அதற்கு முன் இதேபோல வேறு ஒரு சலவைக்கல் ஏலம் எதிர்பார்த்த அளவு வரவேற்பைப் பெறவில்லை என்பதால், இறுதியில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. தாஜ்மஹால் பிழைத்துக் கொண்டது.
- கட்டடக்கலை வல்லுனர்கள், 350 ஆண்டு

லைட் ஹவுஸ் போல மிக உயரமான கோபுரம் ஒன்று. அதன் உச்சி வரை போவதற்கு வசதியாக படிக்கட்டுகள் உண்டு. ஒரு நாள் பத்து, பதினைந்து தவளைகள், அந்தக் கோபுரத்தின் அடியில் கூடின. அவற்றுக்கு மிகவும் உயரமான அந்தக் கோபுரத்தின் உச்சியை முதலில் தொடுவது யார்? என்பது தான் போட்டி. தவளைகளின் போட்டியைக் காண, ஏராளமான மனிதர்கள் திரண்டிருந்தனர்.

போட்டி ஆரம்பித்தது. "சின்னஞ்சிறு தவளைகள்! இவற்றால் பத்து படிகள்கூட தாவி ஏற முடியாது. இவ்வளவு பெரிய கோபுரத்தின் உச்சிக்குப் போக முடியுமா என்ன?" என்று சிலர் கேலி பேசினார்கள்.

இவற்றையெல்லாம் கேட்ட மாத்திரத்தில் சில தவளைகள் மனம் சோர்ந்து போயின. 'நம்மால் இந்தக் கோபுரத்தின் உச்சிக்குப் போவது நடக்காத காரியம்!' என்று முடிவுகட்டி, போட்டியிலிருந்து விலகிக் கொண்டன. மற்ற தவளைகள் தொடர்ந்து படி ஏறி மேலே சென்றன. ஒரு தவளைக்கு மூச்சுத் திணற, வழியில் நின்று விட்டது. "எனக்குத் தெரியும்! தவளைகளால் கோபுரம் ஏற முடியுமா?" என்று நக்கலாகப் பேசினார் ஒருவர்.

உண்மையிலேயே அந்தக் கோபுரத்தின் படிகளில் ஏறி மேலே செல்வது கடினமானது தான். தவளைகள் மிகவும் சிரமப்பட்டன.


ஒரு மணி நேரத்தில், ஒரே ஒரு தவளையைத் தவிர மற்றவை எல்லாம் போட்டியிலிருந்து விலகிவிட்டன.

"இத்தனை தவளைகளால் முடியவில்லை! இந்த ஒரு தவளையால் மட்டும் முடியுமா? நிச்சயம் கோபுரத்தின் உச்சியை அடைவதற்குள் மூச்சு அடைத்துப் போய்விடும்!"

தன்னம்பிக்கை!

களுக்கு முன் தாஜ்மஹாலைக் கட்டி முடிக்க எவ்வளவு செலவாகி இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்களது மதிப்பீடு நான்கு கோடியே இருபது லட்சம். இன்றைய சூழ்நிலையில் அது சாதாரணம்.

• தாஜ்மஹால் என்பதற்கு முடி சூட்டிய அரண்மனை என்று அர்த்தம்.



சூரிய கிரகணத்தின்போது, சூரியனைப் பார்த்தால் கண்கள் பாதிப்புக்குள்ளாகும் என்பது உண்மைதான்.

பொதுவாகவே, சூரியனை நேரடியாக ஒரு சில விநாடிகளுக்கு மேல் நம்மால் பார்க்க முடியாது. அந்த ஒரு சில விநாடிகளில்கூட, சூரிய ஒளியின் தாக்கத்தை வெகுவாகக் குறைக்கும் விதமாய் கண்களில் இருக்கும் 'பாப்பா' சுருங்கி, மிகமிகக் குறைவான அளவில் தான் ஒளி கண்களுக்குள் செல்லும்படி இயற்கையாகவே நிகழ்கிறது. இதனால் கண்களுக்குப் பாதிப்பு ஏதும் கிடையாது.

ஆனால் கிரகண காலத்தில், சூரியனின் ஒளி குறைந்து, இருள் சூழ்ந்த சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது சூரியனைப் பார்க்கிற சமயம், கண்களில் உள்ள பாப்பா, அதிக அளவில் விரிந்து, அதிக அளவில் சூரிய ஒளி உள்ளே செல்லும் நிலை ஏற்படுகிறது. ஆனால், கிரகணத்தின் போது, சூரியனின் ஒளிதான் குறைகிறதே தவிர அதிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சு அப்படியேதான் இருக்கிறது. கண்கள் நன்கு விரிந்திருக்கும் போது, இந்தக் கதிர்வீச்சு, கண்களைப் பாதிக்கும் அபாயம் உள்ளது. எனவேதான், கிரகணத்தின்போது, சூரியனை நேராகப் பார்க்கக் கூடாது என்கிறார்கள்.

தொகுப்பு: **எஸ்.சந்திரமௌலி**

என்று மனிதர்கள் கமெண்ட் அடித்தனர்.

ஆனால் ஆச்சரியம்! ஒரு வழியாக அந்தத் தவளை, கோபுரத்தின் உச்சியை அடைந்து விட்டது. அந்தத் தவளையை ஒரு பத்திரிகையாளர் பேட்டி கண்டார். "இத்தனை மனிதர்களும் உன்னால் முடியாது என்று கிண்டல் செய்த போதும், மனம் தளராமல் உச்சியை எப்படி உன்னால் தொட முடிந்தது?" என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சின்னத் தவளை, "நான் ஒரு லட்சியத்துடன், ஒரு வேலையில் இறங்கி விட்டால், என் காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டு விடுவேன், மற்றவர்கள் என்னைப் பலவீனப்படுத்தும் விதமாக என்ன சொன்னாலும் என் காதில் விழாது. எனவே நான் தைரியம் இழக்க மாட்டேன். எனக்குள்ளே நானே, 'உன்னால் முடியும்! நீ சாதிப்பாய்!' என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே இருப்பேன். எனவே, மற்றவர்கள் விமர்சனம் என்னைப் பாதிக்கவில்லை. நான் தன்னம்பிக்கை இழக்கவில்லை. சாதிக்க முடிந்தது" என்றது.





எது

செண்பகக் காடு பசுமை நிறைந்திருந்தது. அழகு நிறைந்த அந்த வனத்தில் மயில்கள், குயில்கள், கிளிகள், புறாக்கள், மைனாக்கள் போன்ற அழகிய பறவைகள் இன்பமாக வாழ்ந்து வந்தன.

அந்தச் சோலையின் நடுவே ஒரு பெரிய மரம். பறவைகள் தங்கி இளைப்பாறின. அந்த மரத்தின் பொந்து ஒன்றில் ஓர் ஆந்தை பகல் முழுவதும் முடங்கிக் கிடக்கும். இரவில் எல்லா பறவைகளும் கண்ணயர்ந்து தூங்கும் தருணத்தில் பொந்திலிருந்து வெளியில் வந்து இரை தேட ஆரம்பிக்கும். என்றாவது ஒருநாள் மற்ற பறவைகளின் பேச்சைக் காண, பகலில் பொந்திலிருந்து வெளி யில் வந்து எட்டிப் பார்க்கும். அப்போது மற்ற பறவைகள் அதைச் சூழ்ந்து கொண்டு கேலியும் கிண்டலும் செய்தன. குறிப்பாக அதன் விரசமான உருவத்தைப் பார்த்து நகைத்தன. இதனால் ஆந்தை 'ஏன்தான் ஆண்டவன் தன்னை இப்படி வினோதமாகப் படைத்தாரோ' என்று தன்னைத் தானே நொந்து கொள்ளும்.

மற்ற பறவையினங்களோடு கூடி மகிழ்ந்து விளையாட அதன் கொடூர பார்வையுடன் கூடிய விசித்திர உருவமும் அது பகலில் செல்ல இயலாத பார்வையும் கூடிய படைப்பை எண்ணி எண்ணி வருந்தியே இருந்தது.

ஒரு நாள்... அது அமாவாசை கும்மிருட்டு. சோலை முழுக்க ஒரே நிசப்தமாக இருந்தது. ஊசி விழுந்தால் கூட சப்தம் வரும் அளவு அவ்வளவு நிசப்தம். அப்போது எப் போதும் போல ஆந்தை தன் பொந்தை விட்டு வெளியில் வந்து உட்கார்ந்து கொண்டு, தன் சிறகை அகல விரித்து அலகால் கோதிவிட்டுக் கொண்டிருந்தது. இரைக்காக அது எப்போதுமே அலட்டிக் கொண்டதில்லை. ஆகையால் மிகவும் சர்வ சாதாரணமாகவும் சாவகாசமாகவும் சோலை யின் அழகை தன்னுடைய டார்ச் லைட் கண்களை மூடி மூடி திறந்து பார்த்து ரசித்தபடி இருந்தது.





அழகு?

வீ.கலாதேவி
பத்தாம் வகுப்பு,
அ.மெ.மே.நி.பள்ளி,
இடைப்பாடி



அவ்வேளை... வெகு நாட்களாக நாக்கில் எச்சிலை ஊற விட்டபடி இருந்த நயவஞ்சக நச்சுப் பாம்பு ஒன்று சப்தமில்லாமல் மரத்தின் அடிப்பாகத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பறவைகள் இனப்பெருக்கம் செய்து குஞ்சுகள் பொறித்திருந்த காலம் அது. ஒவ்வொரு கூட்டிலும் சின்னஞ் சிறிய குஞ்சுகள். மரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கூடுகளில் பறவைகள் குஞ்சு பொறித்து பாதுகாத்துக் கொண்டிருந்தன. ஆனால் அப்போது பறவைகள் தங்களுக்கும் தங்கள் குஞ்சுகளுக்கும் வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்திருக்கவில்லை. காரணம் அன்று


அமாவாசை இருட்டு. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தன. அதைக் கவனித்த ஆந்தை திடுக்குற்றது. என்ன செய்வ தென்று அறியாமல் யோசித்தபடி விழித்தது.

'கத்தி கூச்சலிட்டால் பறவைகள் இந்தக் கும்மிருட்டில் என்ன செய்யும்? அதிர்ச்சி யடைந்து ஆளுக்கொரு பக்கமாக சிதறுண்டு போய் விடுமே! பாம்பிற்குப் பறவைகளின் குஞ்சுகள் இரையாவது திண்ணமாயிடுமே? பாம்பை அடித்து விரட்டும் சக்தி பறவை யினங்களுக்கு ஏது? கருடன் கண்ணயர்ந் திருப்பார். அவரை அழைப்பதும் வீண். கருடனுக்கும் இரவில் கண்கள் சரியாகத் தெரியாதே. ஆந்தையின் துடிப்பு வினாடிக்கு வினாடி பல கேள்விகளின் உதயத்தில் அதி கரித்தபடி இருந்தது. மரத்தில் ஏற பாம்பு முயற்சித்துக் கொண்டிருந்து. மரத்தில் ஏறி கிடைத்த குஞ்சுகளையும் பறவைகளையும் கபளீகரம் செய்து வயிறு புடைக்க சாப்பிட்டு விடும். ஐயோ பாவம்! என்ன செய்வேன்?' ஆந்தை மிரட்சியுடன் அறி வைக் கூர்மையாக்கியது.

உடனே பாம்பைத் துணிச்சலுடன் எதிர் கொண்டது. நச்சுப் பாம்பு தன் கோரைப் பற்களைக் காட்டி ஆந்தையைப் பயமுறுத்தி யது. "என்னடா முட்டைக் கண்ணா, என் முன்னால் வந்து பயமில்லாமல் தைரியமா நிக்கறே?" என்றது பாம்பு.

"அண்ணா, நீ மிகவும் பலசாலி தான் என்பதை நானறிவேன். இப்போது எதற்காக திட்டமிட்டு இங்கு வந்திருக்கிறாய் என்ப தையும் நானறிவேன். உமக்கு இந்தப் பறவைகளின் சின்னஞ் சிறிய குஞ்சுகள் பசியைத் தீர்க்காது. பக்கத்தில் இருக்கிற பெரிய கிணற்றில் உன்னைப் போல ஒருவன் பெரிய சரீரத்துடன் உள்ளான். அவனைக் கொன்று உனது அகோரப் பசியை ஆற்றிக் கொள்ளலாம். அதுதான் உனக்கு ஏற்ற நல்ல விருந்து."

ஆந்தையின் சொல் பாம்புக்கு அமிர்த மாய் இனிக்க, "சரி, முதலில் அதை வந்து காட்டு" என்றது. ஆந்தை வழி நடத்திச் செல்ல பாம்பு பின் தொடர்ந்தது. ஓர் ஆழமான கிணற்றுக்கு அருகில் கூட்டிச் சென்று கிணற்றின் மதில்மேல் ஏறி "கிணற்றுக்குள் எட்டிப் பாரு தெரியும்" என்றது. பாம்பு கிணற்றுச் சுவரில் தன் தலையை விட்டு எட்டிப் பார்த்தது. சந்தர்ப் பத்தை எதிர்பார்த்திருந்த ஆந்தை தன் கூறிய அலகை உறுதியாக்கிக் கொண்டு பாய்ந்து தன் பலம் கொண்ட மட்டும் பாம்பின் நடுத் துண்டத்தில் பறந்து பறந்து கொத்திக் குதறித் தாக்கியது. திடீர் தாக்குதலால் நிலை தடுமாறிய பாம்பு வலி தாளாமல் புரள, கிணற்றுக்குள் விழுந்தது. ஓசை கேட்ட பறவைகள் ஓடோடி வந்து பார்த்து நடந்ததை அறிந்து உணர்ந்தன. அவற்றின் கண்கள் மகிழ்ச்சியால் குளமாயின. தங்கள் இனம் அழியாமல் காத்த ஆந்தையைப் பாராட்டி மகிழ்ந்தன. அன்று முதல் ஆந்தையை தங்களின் உயர்ந்த தலைவனாக்கிக் கொண்டன பற வைகள்.



விவாத மேடை

எதற்கெடுத்தாலும் மாத்திரையா?

மதிய உணவு இடைவேளை. ப்ரியா, விவேக் மற்றும் நண்பர்கள் சாப்பிட அமர்ந்தனர். விவேக் மட்டும் டிபன் பாக்ஸைத் திறக்காமல் மற்றவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன விவேக், சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கே?''- ப்ரியா.

''என்னமோ தெரியலை ப்ரியா, வயிறு லேசா வலிச்சிட்டே இருக்கு. அதான் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கேன்.''

''விவேக், உனக்கு மாத்திரை தரட்டுமா?'' என்றாள் டெய்சி.

''என்ன மாத்திரை?''

''என்ன மாத்திரையா இருந்தால் என்ன? உனக்கு வயிற்று வலி சரியானால் போதாதா? விவேக், வயிற்று வலிக்கு மட்டும் இல்லை. தலைவலி, காய்ச்சல், பல்வலி, ஜலதோஷம், வயிற்றுப் போக்கு.... இப்படி என்ன பிரச்னை இருந்தாலும் என்கிட்ட மாத்திரை இருக்கு.''

''என்ன டெய்சி, நீயே ஒரு டாக்டர் மாதிரி நடந்துக்கறே!''

''நான் என்ன தலைவலிக்கு வயிற்று வலி மாத்திரையா கொடுக்கப் போறேன்?''

''அதில்லை டெய்சி. ஒரு நோய் ஒரே ஒரு காரணத்துக்காக மட்டும் வர்றதில்லை. ஒரு நோய்க்கு நூறு காரணங்கள் கூட இருக்கலாம். அதெல்லாம் பார்த்து சரியான மருந்து டாக்டரால தான் கொடுக்க முடியும்'' என்றாள் ப்ரியா.

''ப்ரியா சொல்றதும் கரெக்ட் தான் டெய்சி''- விவேக்.

''என்ன கரெக்ட்? அப்ப அவசரத்துக்கு மாத்திரைகளைச் சாப்பிடாமல் நோயோடு அவஸ்தை படச் சொல்றீயா? இல்லைன்னா சின்னப் பிரச்னைக்குக் கூட டாக்டர் கிட்ட போயி நிறைய செலவு செய்யணுமா?'' என்று சற்று கோபத்துடன் கேட்டாள் டெய்சி.

''டெய்சி கோபப்படாதே. டாக்டர் இல்லாத இடத்தில் அவசரத்துக்கு எப்போதாவது மாத்திரையைப் பயன்படுத்தறது தப்பில்லை. கையில் மாத்திரையை வச்சிக்கிட்டு 'ஆ.. ஊ'ன்னா மாத்திரை போடறது ரொம்பத் தப்பு. இப்ப வேணா செலவு குறைவாகும். பிற்காலத்தில் இந்த மாத்திரைகளால் பெரிய அளவில் பக்க விளைவுகள் நம் உடலில் ஏற்பட்டால் என்ன செய்யறது? சிறுநீரகங்கள் பாதிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. நீ மாத்திரைகளை டாக்டர் ஆலோசனை இல்லாமல் அதிகம் பயன்படுத்தாதே டெய்சி'' என்றாள் ப்ரியா.

''விவேக் மாத்திரை வேணுமா, வேண்டாமா?'' -டெய்சி

''என் வயிற்று வலி போயிருச்சு. மணி ஆச்சு, சீக்கிரம் வாங்க. முதல் பீரியட் அறிவியல்'' என்றபடி எழுந்து சென்றான் விவேக்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எழுதி அனுப்புங்கள்.

- தம்பிப்பயல்



தப்பிக்கும் மந்திரம்!

கதை: ஸ்நேகா   படம்: சேகர்


முறுக்கு



லட்டு


வளை


கூடை

 சுடும் வாசனை வந்ததும் க்கு தீபாவளி நினைவுக்கு வந்தது. 'ஆஹா! ,  என தினமும் இனி பலே சாப்பாடுதான்!' என்று நினைத்தது. உடனே  தன் குத் திரும்பியது. பெரிய  ஒன்றை எடுத்துக் கொண்டு க்கு சுடும்  நோக்கிச் சென்றது . எதிரில்  யைக் கண்டதும் திகைத்து நின்றது . சுதாரித்த  " அண்ணா, என்னை உயிருடன் விட்டால் பால்கோவா, பால்கேக் இருக்கும் இடத்தைக் காட்டறேன்" என்றது.  க்கு நாவில் நீர் ஊறியது.  சம்மதிக்க இரண்டும் அந்த டை அடைந்தன. நன்றாகச் சாப்பிட்டன. ' அடையாளம் தெரிந்து விட்டது. யையும் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்!' என நினைத்தது . " அருகில் வா. ஆபத்து நேரத்தில் தப்பிக்கும் மந்திரத்தைச் சொல்லித் தரேன்" என்றது . "நான் மட்டும் கற்றால் போதுமா? என் குடும்பத்தையும் அழைக்கிறேன்" என்றது . மகிழ்ந்த  யுடன் வெளியில் வந்தது.  க்குள் சென்று நீண்ட நேரமாகியும் வரவில்லை. காத்திருந்த  "சீக்கிரம் வா " என்று குரல் கொடுத்தது. "எனக்கு ஏற்கெனவே அந்த மந்திரம் தெரியும். அதனால்தான் தப்பிச்சிட்டேன் பார்த்தியா? போடா நன்றி கெட்டவனே" என்று குரல் கொடுத்தது . ஏமாற்றத்துடன் திரும்பியது .

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடைகள்:


1. குருவி வால் 2. காசி ஸ்வீட்ஸ், 3. ஸ்வீட் பாக்ஸ் - லட்டு, 4. யானையின் விழிகள் 5. யானையின் கைப்பை 6. பட்டாசுப் படம் 7. மரம் 8. யானையின் தந்தம் 9. யானையின் துதிக்கை 10. வீட்டின் கதவு

எல்லாமே அழகு!

கதை, படம்:
ராம்கி













தோட்டத்திற்கு வந்த துறவி வானத்தைக் காட்டி, பேசினார்.
அது என்ன தெரிகிறதா?
அது நிலா என்பது எல்லோருக்கும் தெரியும்.
சரி, இது என்ன சொல் பார்ப்போம்.
இது ரோஜா.
இந்த ரோஜா என்றாவது நாம் அந்த நிலாவைப் போல் இல்லையே என்று கவலைப்பட்டதுண்டா? இல்லை அந்த சந்திரன் தான் நாம் ரோஜா போல் இல்லையே என்று வருந்தியதுண்டா? ரோஜா ஓர் அழகு என்றால் நிலா வேறு மாதிரி யான அழகு.
தளபதிக்குப் புரிந்தது.
துறவியே, என்னை மன்னியுங்கள், உண்மையை உணர்ந்து கொண்டேன். நான் வருகிறேன்.
அதன்பின் அத் தளபதி, யாரோடும் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை.

மறு உபயோகம்

ஹாய் ப்ரெண்ட்ஸ்! தினமும் காலை உங்கள் வீட்டிற்கு வருபவன் தான் நான். செய்தித்தாளான என்னிலிருந்து எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து கொள்கிறீர்கள்! அதன் பிறகு என்னைத் தூக்கி எறியாமல், மறு உபயோகம் செய்யலாம். இதனால் மரங்கள் வெட்டப்படுவது ஓரளவாவது குறையும் அல்லவா!



என்னென்ன வேண்டும்?

இரண்டு பக்கங்களும் சேர்ந்திருக்கும் செய்தித் தாள் ஒன்று, பசை, ஸ்டேபிலர் பின்

எப்படி செய்வது?

1. விரித்த தாளை இரண்டாக மடிக்கவும்.
2. மடித்த பகுதிகளை மீண்டும் உள்பக்கமாகப் பாதியாக மடிக்கவும்.
3. ஒரு பாதியை மீண்டும் வெளிப்பக்கமாக மடிக்கவும். இதே போல் எதிர்ப்பக்கத்திலும் மடிக்க வேண்டும்.
4. பசை தடவி வல, இடப் பக்கங்களை ஒன்று சேருங்கள். ஸ்டேபிலர் பின் போட்டால் உறுதியாக இருக்கும். பையின் மேலே சணலால் கைப்பிடி வைத்துக் கொள்ளலாம்.




இதோ உங்கள் சுற்றுச் சூழல் காக்கும் பை தயார்! பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக இதைப் பயன்படுத்தலாம்.



குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்



இடமிருந்து வலம்:

4. முதல் தமிழ் மாதத்தின் மெய்யெழுத்து விடுபட்டுள்ளது (3)
5. இந்தியாவின் முதல் பிரதமர் (8)
16. வலது என்பதின் எதிர்ப்பதம் (3)
19. ஆகஸ்ட் 15 (8)

வலமிருந்து இடம்:

7. திருவள்ளுவரின் மனைவி (3)
9. ராசிகளில் ஒன்று (3)
11. நாவறட்சி (3)
15. இந்தியக் குடியரசுத் தலைவர் (3)
18. மேனகா, ... ஊர்வசி தேவலோக அழகிகள் (3)
21. பெண் (3)

1	■	2	■	3	■	4		
5								■
	■		■		■	6		7
	8	9	■		10	11	■	
■		■	12	■		■	13	■
14	■			15	■	16		17
		18	■		■		■	
■	19							
	20	21	■		■		■	

மேலிருந்து கீழ்:

1. வருகை (4)
2. கஜினி .... 18 முறை படையெடுத்தார் (4)
3. அஞ்சலட்டை சரியாகப் போய்ச் சேர 'இதை' தெளிவாக எழுத வேண்டும் (4)
4. சிநேகத்தைக் குறிக்கும் பெண் பெயர் (4)
7. நாய் நன்றியைத் தெரிவிக்க உபயோகிக்கும் உறுப்பு (2)
8. சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனம் (2)
10. பீமன் கையில் இருக்கும் ஆயுதம் (2)
12. முக்கனிகளில் ஒன்று (2)
13. நம் நாட்டின் .... பகுதியில் இந்தி மொழி அதிகமாகப் பேசப்படுகிறது (2)
14. அறிஞர்கள் கூடி உள்ள இடம் (2)
15. தையற்காரர் துணி வெட்டுவதற்கு இதைப் பயன்படுத்துவார். (4)
16. இந்தியாவின் முதல் பெண் பிரதமர் (4)
17. சிறு..........ம் பல் குத்த உதவும் (4)

கீழிருந்து மேல்:

6. பாதி ருசுவில் திரும்பியுள்ள ஸ்வரம் (3)
20. ....பால் உடலுக்கு நல்லது. (3)
21. உதடு (4)

- பி. ஆனந்தன்
சென்னை

விடை: 64ஆம் பக்கம்

மழைக் காலத்தில்

ஹலோ சுகமா?

● நா. முத்தழகு, சேலம்

? தினமும் காலையில் எழுந்ததும் எனக்கு தலைவலி வருகிறது. வாந்தி வந்தபிறகு தலைவலி நிற்கிறது. இதற்கு என்ன காரணம்? என்ன சிகிச்சை?

! தொடர்ந்து தினமும் காலையில் எழுந்ததும் தலை வலி மற்றும் வாந்தி வந்தால் அது 'மைக்ரேன்' எனப்படும் ஒற்றைத் தலைவலியாக இருக்க அதிக வாய்ப்புள்ளது. இதுபோல் 'சைனுசைட்டிஸ்' என்று அழைக்கப்படும் தலை வலியும் ரத்தசோகையால் ஏற்படும் தலைவலியும் சிலருக்குக் காலையில் தூங்கி எழுந்ததும் வரலாம். குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெற்று தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவும்.



● வ. திருமூர்த்தி, திருமங்கலம்

? மழைக்காலத்தில் குழந்தைகளுக்கு அடிக்கடி தடுமம், சளி பிடித்துக் கொள்கிறது. இதைத் தடுக்க ஒரு வழி சொல்லுங்கள் டாக்டர்.

! மழைக்காலத்தில் வைரஸ் மற்றும் பாக்டீரியா தொற்றுக் கிருமிகள் அதிகமாக பரவுவதால் மக்களுக்கு நோய்களும் அதிக அளவில் ஏற் படுகின்றன. தடுமக்காய்ச்சல், சளிக்காய்ச்சல், மூளைக் காய்ச்சல், வயிற்றுபோக்கு, சீதபேதி, டைபாய்டு, காலரா, மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் மழைக்காலங்களில் வேகமாகப் பரவும். பொதுவாக இவை எல்லா வயதினருக்கும் ஏற்படுவதுதான் என்றாலும் இயற்கையிலேயே குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு என்பதால் அவர்களுக்கு இந்த நோய்கள் விரைவில் தொற்றிக் கொள்ளும். குழந்தைகளை மழையில் நனைய விடாதீர்கள். நனைந்துவிட்டால் உடனே உடலைத் துடைத்து விடுங்கள். குளிர்ச்சியான உணவுகளைக் குறைத் துக் கொள்ளுங்கள். கடைகளில் முறையான பாது காப்பில்லாமல் விற்கப்படும் தின்பண்டங்களை வாங்கித் தராதீர்கள். வெளியே செல்லும்போது செருப்பு அணிவது அவசியம். குடிநீரை எப்போதும் கொதிக்க வைத்து ஆறவைத்துப் பயன்படுத்தினால், தண்ணீர் மூலம் பரவும் நோய்களைத் தடுத்து விடலாம். வீட்டைச் சுற்றி மழைத் தண்ணீர், சாக்கடை நீர் போன்றவை தேங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் கொசுக்கள் சேருவதைத் தடுக்கலாம். மலேரியா, டெங்கு, மூளைக்காய்ச்சல் போன்றவை ஏற்படாது.

● பா. பரிமளா, ஊட்டி

? என் அம்மாவுக்கு ஆஸ்துமா உள்ளது. இது ஏதோ அலர்ஜியால் வருகிறது என்கிறார்கள். என் அம்மாவுக்கு எது அலர்ஜி என்று எப்படி கண்டு பிடிப்பது டாக்டர்?

! ஒவ்வாமை ஆஸ்துமாவைக் கண்டறிய ரத்தப்

சளி பிடிப்பது ஏன்?



பரிசோதனைகளும் ஒவ்வாமைப் பரிசோதனைகளும் உதவுகின்றன. நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்து வகையான தூசுகள், பூக்களின் மகரந்தங்கள், காளான்கள், செல்லப் பிராணிகளின் உரோமங்கள், பூச்சிகள், சிறகுகள், எச்சங்கள், உண்ணும் உணவுகள், பழங்கள், காய்கறிகள், பால் போன்ற திரவ உணவுகள், மென்பானங்கள், அசைவ உணவுகள், வேதிப் பொருள்கள் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட கரைசலில் இருந்து ஒரு துளியை எடுத்து, வலியே இல்லாத ஊசி வழியாகத் தோலில் போடுவார்கள். அடுத்த அரைமணி நேரத்தில் எந்தப் பொருளுக்கு ஒவ்வாமை உள்ளது என்பது தெரிந்துவிடும். அந்தப் பொருளை உபயோகிப்பதை நிறுத்திவிட்டால் அல்லது அதற்குரிய தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொண்டால் ஒவ்வாமை ஆஸ்துமாவைத் தடுத்துவிடலாம்.

புதிர் இங்கே! விடை கீழே:

1. நமக்கு ஒரு நாளில் சுரக்கும் உமிழ்நீரின் அளவு என்ன?

அ. ஒரு லிட்டர்
ஆ. ஒன்றரை லிட்டர்
இ. இரண்டு லிட்டர்

2. உலக எய்ட்ஸ் தினம் எது?

அ. நவம்பர் 1
ஆ. டிசம்பர் 1
இ. ஜனவரி 5

3. டான்சில் என்பது எது?

அ. தொண்டைத் தசை
ஆ. தொண்டை வீக்கம்
இ. நிணநீர்த்திசு

4. மனித ரத்தத்தில் ஆர்.எச். காரணி உள்ளது என்பதைக் கண்டறிந்தவர் யார்?

அ. வில்லியம் ஹார்வி
ஆ. ஜான் பெர்கர்
இ. லான்ஸ்டீனர் மற்றும் வியன்னர்

5. இவற்றில் எதில் நரம்பு இல்லை?

அ. நாக்கு
ஆ. கார்னியா
இ. உள்ளங்கை

விடை இங்கே!

1. ஆ 2. ஆ 3. இ 4. இ 5. ஆ

டாக்டர் கு. கணேசன்



குட்டப்பனும்

வி.கமலக்கண்ணி

அழகு மலையில் பெரியண்ணன் என்ற செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு இரண்டு பையன்கள். மூத்தவன் முத்தப்பன் பணம் சேர்ப்பதிலேயே குறியாய் இருந்தான். வட்டிக்குப் பணம் கொடுத்து ஏகப்பட்ட பணம் சேர்த்துவிட்டான். இளைய மகன் குட்டப்பன். தோட்டத்தைப் பார்த்துக் கொண்டும் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டும் நியாயமாய் வரும் வரும்படியில் வாழ்ந்து வந்தான்.

வயது முதிர்ந்த பெரியண்ணன் பையன்கள் இருவருக்கும் ஒத்துவராமல் போவதைக் கண்டு அவர்களுக்கு சொத்துகளைப் பிரித்துக் கொடுத்துவிட்டு கண்களை மூடி விட்டார்.

பெரியண்ணன் இறந்தபின், மூத்தவன் முத்தப்பன் தன் தம்பியின் சொத்துகளும் தனக்கே சேர்ந்துவிட்டால் நன்றாக இருக்கும் என எண்ணினான்.

ஒருநாள் தம்பியின் வீடு சென்று "தம்பி, நீ இப்படி ஆடு மேய்த்துக் கொண்டிருந்தால் எப்படி பணக்காரனாவது? வேறு ஏதாவது வேலை செய்வதுதானே!" என்றான்.

"நீ பணத்துக்குக் கட்டுப்பட்டவன். நானோ நீதி நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன். போதும் என்ற மனம் எனக்கு இருக்கு. எனவே இது போதும்" என்றான்.

"நியாயம், நீதி என்று பேசுகிறாயே, நான்கு பேரிடம் கேட்டுப் பார்ப்போம். பணம் பெரிதா, நியாயம் நீதி பெரிதா என்று. அவர்கள் என் பக்கம் தீர்ப்பு சொல்லிவிட்டால் உன் தோட்டத்தையும் ஆடு மாடுகளையும் எனக்குத் தந்து விடுவாயா?" என்று கேட்டான்.

குட்டப்பனும் சரி என்றான். இருவரும் பாதையில் நடந்து சென்றனர். வழியில் நான்கு பேரை மடக்கிக் கேட்டனர். நால்வரும் ஏதோ விரக்தியில் பணம்தான் முக்கியம் என்றனர்.

"பார்த்தாயா தம்பி. நான்கு பேரும் பணம் தான் பெரிது என்று என் பக்கம் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். நாம் பேசியபடியே உனது தோட்டத்தையும் ஆடு மாடுகளையும் எனக்குத் தந்து விடு" என்றான்.



தம்பியும் சிரித்துக் கொண்டே தனது பங்குகளை அண்ணனிடம் கொடுத்துவிட்டு "அண்ணா! ஒன்று கூறுகிறேன். நான் நியாயத்திலிருந்து தவற மாட்டேன். அது எனக்கு நன்மை செய்யும். இதை ஒரு நாள் உணருவாய்" என்றபடி கால் போன போக்கில் நடக்க

குட்டிச் சாத்தான்களும்



ஆரம்பித்தான்.

ஆற்றங்கரைப் பக்கம் உள்ள ஓர் ஆல மரத்தின் அடியில் அமர்ந் தான்.

அதே சமயம் ஆய்... ஊய்... என்ற சத்தம். கிடுகிடு என்ற இரைச்சல். கத்திக் கொண்டே மூன்று குட்டிச் சாத்தான்கள் மரத்தை நோக்கி வந்து கொண்டிருக்க அதைத் தொடர்ந்து ஒரு பெரிய சாத்தானும் வந்து நின்றது.

தலைமை சாத்தான் குட்டிச்சாத்தான்களில் ஒன்றைப் பார்த்து, "டேய்! நீ இன்று என்னென்ன காரியம் செய்தாய்?" என்று இடி முழக்கம் போல் கேட்டது.

அதற்கு அந்த முதல் குட்டிச்சாத்தான் இந்தக் கிராமத்துக்குள் இரு தரப்புக்குள் சண்டை மூட்டி விட, அங்குள்ள முருகைய் யனிடம் கோள்மூட்டி வைக்கச் சொன் னேன். அவன் மூட்டிவிட்டான். சண்டை கள் பெரிதாகி சாதி, மத, இனப் போராட்ட மாகி ஊரே கலகலத் துப் போய் நிற்கிறது. நாளை தீ பெரிதாய் மூண்டு, வெட்டும் குத் தும் நடக்கலாம்" என்று கூறி நிறுத்தியது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த குட் டப்பன் காதைத் தீட்டினான்.

"இதைத் தீர்க்க வழி என்ன?" சாத்தான் கேட் டது. "இருதரப்பு தலை வர்களையும் கண்டு பேசி, முருகைய்ய னைக் காட்டிக் கொடுக்கணும். அவ்

வளவுதான் பிரச்னை எளிதில் தீர்ந்து விடும்.''

பின் இரண்டாவது குட்டிச் சாத்தானைப் பார்த்து ''நீ என்னடா சாதித்தாய்?'' என்று கேட்டது.

''நான் ஊரில் உள்ள பொதுக் கிணற்றில் விஷம் ஊற்றச் செய்துவிட்டேன். நாளைக் காலையில் ஊர் மக்கள் அனைவரும் அத் தண்ணீரைக் குடித்து மாண்டு போவார்கள்'' என்றது குதித்துக் கொண்டே.

''அடப்பாவி! இதுக்கு மாற்று ஏதாவது உண்டா?''

''உண்டு. ஊர்க் கோடியில் உள்ள தோட்டத்தில் விஷ்ணு கிராந்தி என்னும் மூலிகைச் செடி உள்ளது. அச்செடியைப் பறித்து வந்து கிணற்றுக்குள் போட்டால் விஷம் முறிந்துவிடும்'' என்று கூறியது.

குட்டப்பன் இதையும் கவனமாகக் கேட்டுக் கொண்டே காதை இன்னும் தீட்டினான்.

மூன்றாவது குட்டிச்சாத்தானைப் பார்த்து ''அடப் போக்கிரி. நீ என்னடா புதுசா சாதிச்சே?'' என்று கேட்டது.

''இந்நாட்டு இளவரசி இளையராணிக்கு தீராத நோய் உண்டாக்கிவிட்டேன். அவள் சில நாட்களில் இறந்துவிடுவாள். அரசு கை மாறும்'' என்றது ஆடிக்கொண்டே.

''வடக்கு மலையடிவாரத்தில் உள்ள நாகலிங்கப் பூக்களைப் பறித்து வந்து, இளவரசியின் அறையில் புகைக்க வேண்டும். புகையை சுவாசித்த அரசியின் நோய் தீரும்'' என்றது மூன்றாவது குட்டிச்சாத்தான் பல்லைக் காட்டியபடி.

பின் சாத்தான்கள் ஓடிவிட்டன.

குட்டப்பன் உஷாரானான். மடமடவென கீழே இறங்கி ஓடினான். இரு கோஷ்டித் தலைவர்களையும் சந்தித்துப் பேசி கோள் மூட்டி வைத்த முருகையனை அடையாளம் காட்ட அனைவரும் அவனைப் பிடித்தனர். இரு தலைவர்களும் ஒன்றாகக் கலந்து பேசினார்கள். ஊர்க் கலவரம் தவிர்க்கப்பட்டது.

குட்டப்பனுக்கு ஏக சந்தோஷம், சண்டை நின்றதில், நியாயம் ஜெயித்ததில்.

பின் கிணற்று விவகாரத்தை ஊர்த் தலைவர்களிடம் கூறி அதில் விஷம் கலந்துள்ளது என்று புரிய வைத்து, அதைத் தடுக்க தோட்டத்துக்கு ஓடினான். அங்கு நின்ற விஷ முறிவு விஷ்ணு கிராந்தி செடிகளைக் கொண்டு வந்து கிணற்றில் போட்டான். விஷம் முறிந்தது. ஊர் மக்கள் யாவரும் அதைக் குடிக்க ஒருவருக்கும் ஒன்றும் செய்யவில்லை. விஷம் ஊற்றியவனைப் பிடித்து அடி, உதை கொடுத்தார்கள்.

குட்டப்பனுக்கு மேலும் பாராட்டுகள். அரசரிடம் சென்று ''அரசே, உமது மகளின் நோயை நான் குணமாக்குகிறேன்'' என்றான்.

அரசரும் சம்மதித்தார். உடனே குட்டப்பன் தாமதிக்காமல் ஓடினான் வடக்கு மலையை நோக்கி. அங்கு தேடித்தேடி நாகலிங்கப் பூக்களைப் பறித்தான். கொண்டு வந்து அரசியின் அறையில் புகை மூட்டினான். இளவரசி அதை முகர்ந்தாள். அவளது முகம் பிரகாசித்தது. அவளது நோயும் அகன்றது. உற்சாகமாக எழுந்த இளவரசியைக் கண்டு அரசர் ஆனந்தம் கொண்டார். தன் மகளின் நோயைக் குணமாக்கிய குட்டப்பனுக்கே தன் மகளைத் திருமணம் செய்து வைத்து தன் நாட்டுக்கு அரசராக்கினார்.

ஊரெங்கும் குட்டப்பனின் புகழ் ஓங்கியது. எங்கும் இதே பேச்சு. இந்த விஷயம் அண்ணன் முத்தப்பனின் காதுக்கும் எட்டிவிட தம்பியைப் பார்க்க வந்தான்.

''தம்பி, என்னை மன்னித்துவிடு. பணம் அத்தனையும் ஒரு சுயவனால் இழந்தேன். இப்போ நான் பரதேசி.''

''இல்லை அண்ணா, உண்மையும் நீதியும் நியாயமும் உலகில் பெரிது என்பதை நீ உணர்ந்து கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி. இங்கேயே தங்கிவிடு'' என்றதுடன், நல்ல வேலையும் கொடுத்தான்.

கண்டுபிடிப்பு!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனர்கள் பட்டாசுகளைக் கண்டுப்பிடித்து விட்டனர். இன்றும் சீனர்களின் திருமணம், பிறந்த நாள் விழா, திருவிழாக்களில் பட்டாசுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர்.



பிரபலங்களின் வாழ்வில்...


நல்லதைப் போற்ற வேண்டும்!

கிடைக்கவில்லை...

ஐரோப்பிய நாட்டில் 'பிரெடரிக் தி கிரேட்' என்ற மன்னர் "ஏழைகளுக்கு எவ்வளவோ செய்கிறேன். ஆனால் ஏதும் கிடைக்கவில்லை என்று வருத்தப்படுகிறார்களே! அது எப்படி?" என்று தன், அமைச்சர்களைக் கேட்டார். அவர்களில் வயது முதிர்ந்த அமைச்சர் நான் அதற்கு பதில் சொல்கிறேன் என்றார். ஒரு ஐஸ் கட்டியை எடுத்து பக்கத்திலிருந்தவரிடம் கொடுத்து, இதை அடுத்தவரிடம் கொடு என்றார். அவரை இன்னொருவரிடம் கொடுக்கச் சொன்னார். இப்படியே கைகள் மாறி கடைசியில் மன்னர் கைக்குச் சேர்ந்த போது, இரண்டு சொட்டுத் தண்ணீர் தான் மிச்சமிருந்தது.

"புறப்படும்போது ஐஸ் கட்டியாக இருந்தது. இடையில் இத்தனை தரகர்கள் இருந்ததால் கடைசியில் உங்கள் கைக்கு வரும் போது இரண்டு சொட்டுத் தண்ணீர்தான் கிடைத்தது. இப்படித்தான் மன்னரே நம்முடைய திட்டங்கள் பொது மக்களிடம் போய்ச் சேருகிறது" என்றார் அமைச்சர்.

- ஜி.கே.எஸ்.மூர்த்தி,
கோபிசெட்டிப்பாளையம்





• பிரெடரிக்



• நெப்போலியன்

என்ன சத்தம்?

நெப்போலியனின் வீரத்தை சோதிக்க விரும்பிய ஐரோப்பியத் தலைவர்கள் ஒரு சோதனை செய்தார்கள்.

அதன்படி ஒரு கூட்டத்தில் தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அனைவரும் ஒரே நேரத்தில் தேநீரை எடுத்து அருந்தினார்கள். அவ்வாறு அருந்த முற்படும் போது, வெளியே பலத்த சத்தத்துடன் பீரங்கியை வெடிப்பது என முடிவு செய்தார்கள்.

அதேபோல், அனைவரும் தேநீர் அருந்தும்போது பலத்த ஓசையுடன் பீரங்கியை வெடித்தனர். சத்தம் கேட்டு அனைவரும் கோப்பையைப் பயந்து போய் கீழே விட்டனர்.

ஆனால், நெப்போலியன் மட்டும் எதற்கும் அஞ்சாதவராய் மெல்ல தேநீரை அருந்தியவாறே, "அங்கு என்ன சத்தம்?" என்று கேட்டார்!

- எம். வினோத்,
சங்கரன்கோவில்

பிடித்தது எது?


ஒருமுறை பெர்னாட் ஷாவிடம் ஒருவர் வந்து "எத்தனையோ புத்தகங்களை எழுதி

உள்ளீர்கள். படித்தும் இருக்கிறீர்கள். இவற்றில் உங்களுக்கு மிகவும் பிடித்ததும் பயனுள்ளதுமான புத்தகம் எது?'' என்று கேட்டார். பெர்னாட் ஷா என்ன சொல்லப் போகிறார் என்று எல்லோரும் மிகவும் ஆவலாக எதிர்பார்ப்போடு இருந்தனர். மிகவும் அமைதியாக ''செக் புத்தகம்'' என்று பதில் அளித்தார் ஷா!

- மா. விசாகன், இராஜபாளையம்

போற்ற வேண்டும்!

இயேசுநாதரும் அவர் சீடர்களும் நடந்து சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு நாய் செத்துக் கிடந்தது. அதன் நாற்றத்தைத் தாங்க முடியாத சீடர்கள் ''என்ன நாற்றம்?'' என்று அருவருப்படைந்தனர். ஆனால் இயேசுவோ ''என்ன முத்துப் போன்ற வெண்மையான பற்கள்!'' என்றார்.



• ஐன்ஸ்டீன்

இதைக் கேட்ட சீடர்கள் வியப்படைந்தனர். அவர்களில் ஒருவன் இது குறித்து வினவினான்.

உடனே இயேசு தம் சீடர்களிடம், ''எவ்வளவு குறையுள்ளவற்றின் நடுவிலும் நல்லது இருக்கும். அதைப் போற்றக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னார்.

- ம. சந்தோஷ், நான்காம் வகுப்பு, சிவகாசி அரிமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி

டிரைவரின் பேச்சு!

அறிஞர் பெருமக்கள் நிறைந்த அந்தப் பெரிய அரங்கம் நிரம்பி வழிந்தது. ரிலேட்டிவிட்டி தியரி பற்றி, அன்று பேசிய சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்டு அனைவரும் தம்மை மறந்தனர்.

ஒருவர் எழுந்தார். ''இந்த தியரியில் ஒரு சிறிய சந்தேகம். விளக்குங்கள்'' என்றார். பேச்சாளருக்குத் தூக்கிவாரிப் போட்டது. சுதாரித்துக் கொண்டார்.

''இதெல்லாம் என்ன சந்தேகம்? என் கார் டிரைவரே இதற்குப் பதில் சொல்வாரே. அவரையே கூப்பிடுகிறேன்'' என்றார். காரிலிருந்தவர் நேரே மேடைக்குச் சென்று, கேள்வி கேட்டவரின் ஐயத்தைப் பேச்சாளரைவிட மேலும் அழகாய் விளக்கி, அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார்.

விழா முடிந்து, பேச்சாளரும் அவர் பின்பு ஐயத்தை விளக்கியவரும் காரில் புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும் கார் நின்றது. முதலில் பேசிய பேச்சாளர், ''ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் ரிலேட்டிவிட்டி தியரியைப் பற்றி பல இடங்களில் பேசியது எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டது. ஆனால் இப்படி ஏடாகூடமாக ஒரு கேள்வி கேட்பார்கள் என்று நான் நினைக்கவே இல்லை. என்னை மன்னியுங்கள்'' என்றார். அவர்தான் உண்மையான கார் டிரைவர்.

இவருக்குப் பின்னே சென்று விளக்கமளித்தவர்தான் அந்தத் தியரியையே கண்டுபிடித்த ஐன்ஸ்டீன். ''அக்கூட்டத்திலுள்ள பெரும்பாலோருக்கு நான் யார் என்றே தெரியாது. அந்தத் தைரியத்தில் தான், உன் திறமைக்கு ஒரு வாய்ப்பு தந்து பார்க்கலாமே என்றுதான் நானே உன்னைப் பேச அனுப்பினேன். வெகு அற்புதமாகப் பேசினாய். அதைவிட, சங்கடமான சமயத்தில் சமயோசிதமாக என்னை அழைத்தாயே. இந்தப் புத்திசாலித்தனமும் ஒரு திறமையே. படிப்பதாலும் கேட்பதாலும் மட்டுமே திறமை வளராது. சுய சிந்தனையாலும் அவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார்!

- மு. முரளீதரன், சென்னை

அம்மாவைத் தேடி... 1

கதை: வாண்டுமாமா **படம் : மகேஷ்**

முன்னோட்டம்

விதி அவள் வாழ்க்கையில் விளையாடியது. ஒரு வயதுக் குழந்தையை அவள் கையில் கொடுத்துவிட்டு கணவன் அகால மரணமடைந்தான். அவள் அபலையானாலும் அழகி, மனோதிடம் கொண்டவள். தன்னிடம் பரிதாபமும் அன்புங் கொண்ட அயல் வீட்டு



மூதாட்டியிடம் தன் பச்சிளங் குழந்தையைக் கொடுத்தாள். கழுத்திலிருந்த இரண்டுவடம் தங்கச் சங்கிலியை கழற்றி அந்த நல்மனங்கொண்ட மூதாட்டியிடம் தந்தாள். தன் குழந்தையைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டாள். ''கடவுள் கண் திறப்பார். விரைவில் குழந்தையை மீட்டுக் கொள்வேன்'' என்று கூறி, விதியோடு போராடக் கிளம்பி விட்டாள் வசந்தா.

விதி தன் விளையாட்டைத் தொடங்கியது.



வசந்தாவின் அழகும் திறமையும் அவளைப் பிரபல சினிமா நட்சத்திரமாக்கியது. தன் குழந்தையை மறக்காவிட்டாலும் அதை மீட்க முடியவில்லை அவளால்.

மூதாட்டியிடம் கிராமத்தில் குழந்தை வளர்ந்தது, அகிலா என்ற பெயருடன். அம்மூதாட்டி தனி ஆள். ஆகவே முதுமை காரணமாக அக்குழந்தையைப் பராமரிக்க இயலாமல் நகரிலுள்ள ஓர் அநாதை இல்லத்தில் கொண்டு விட்டு, தன் கடமையையும் காலத்தையும் முடித்துக் கொண்டாள்.

தாய் வசந்தா பிரபல சினிமா நட்சத்திரமாக...

அவள் குழந்தை அகிலா - பன்னிரண்டு வயதுச் சிறுமியாக, ஒரு சிற்றூரில் அநாதை இல்லத்தில்...

தாயைப் போலவே அகிலா தைரியசாலி. அநாதை இல்லச் சூழ்நிலை அவளுக்குப் பிடிக்க வில்லை. "என் தாயை எப்படியும் கண்டுபிடிப்பேன்!" என்று தவமியற்றி வந்தவள், அங்கிருந்து தப்பிச் செல்ல சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள். அது வாய்த்தது. சக பெண் ஒருத்தி உதவ, இருவரும் தப்பி ஓடலானார்கள். ஆனால் விதியின் பார்வையிலிருந்து தப்ப முடியவில்லை. ஒரு சாலை விபத்தில் சிக்க வைத்து இருவரையும் மருத்துவமனையில் கொண்டு சேர்த்து விடுகிறது.



அகிலாவிற்கு அதிக காயமில்லை. அவள் தோழிக்குப் படு காயம். இந்த நிலையில்...


மருத்துவமனையில்...
''என்னை மன்னித்து விடு அகிலா. நம் திட்டம் இப்படியாகுமென்று நினைக்கவில்லை... உன் வாழ்வையும்...
இப்படியெல்லாம் பேசாதே. நானும் சம்மதப்பட்டுத்தானே வெளியேறினேன்.!
நல்ல காலம்! உனக்குக் காயம் ஏதுமில்லை. நீ தப்பிச் செல் அகிலா...
அது முடியாது போலிருக்கு. அநாதை இல்லத்து நிர்வாகி தண்டபாணி நம்மைக் காண அனுமதிக்காகக் காத்திருக்கிறார்... வெளியே!
அந்தக் குட்டி தப்பி விட முடியாது. அவள் அம்மா யார் என்பதை நான் கண்டுபிடிச்சுட்டது அதுக்குத் தெரியாது. இவளை அவள் அம்மாகிட்ட சேர்த்து அந்த ரகசியத்தைக் காப்பாத்த பெருந் தொகையைக் கறந்துடணும்.
ஐயோ! இப்ப என்ன செய்யப் போறே?
என் அம்மாவைத் தேடும் கனவு பலிக்காது போலிருக்கு.
ஸ்... மனந்தளராதே. அந்த ஆளை அருகே வரச் சொல்.
எங்களுக்கு ஒரு உதவி செய்யணும்.
சரி


ஏன் இப்படி காக்க வைக்கிறாங்க?
சார்! கொஞ்சம் தள்ளி நில்லுங்க!
கடவுளே! தப்பிச்சேன். அந்த ஆள் என்னைப் பார்த்திருக்கமாட்டானே?
சான்ஸே இல்லே. நீ தைரியமா போகலாம்.
ஏய்! லட்டு வேகமாக வா. தண்டபாணி கண்ணிலே மண்ணைத் தூவிட்டு தப்பிட்டோம். என் அம்மாவைத் தேடத் தொடங்கியாகணும்.
இது நிச்சயம் என் அம்மாவோட படமாத்தான் இருக்கணும். இது ஒரு சினிமா நட்சத்திரத்தோட படம்னு சொல்றாங்க. அந்த வழியிலேயும் தேடிப் பார்க்கணும்.


படப்பிடிப்பு தளத்தில் நடிகை வசந்தா -
ஃபோனிலே பேசிய அந்த ஆள் தன் பேரைக் கூறல்லே. உங்க குழந்தை சௌக்கியமா இருக்குன்னான்.
அது எப்படி சாத்தியம் மாலினி?
அகிலாவின் ஒரே குறிக்கோள் தண்டபாணியின் பார்வையிலிருந்து வெகு தூரம் போய் விடவேண்டும் என்பதுதான்.
பஸ்ஸில் ஏறி அமர்ந்ததும் -
பொண்ணு! பஸ்ஸிலே நாய்க்குட்டியையெல்லாம் கொண்டு போகக் கூடாது. கண்டக்டர் உன்னை இறக்கிவிட்டுடுவார்.
லட்டு! உன்னை விட்டுப் பிரிய என்னாலே முடியாது. ஆனால் தண்டபாணிகிட்டேயிருந்து தப்பியாகணும்.
கண்டக்டர் கண்ணிலே படாம என் லட்டுவை மறைச்சாகணும்.


லட்டு, சமத்தா இதுக்குள்ளே ஒளிஞ்சுக்கோ. குரலைக் காட்டாதே.
அடுத்த ஸ்டாப்பில்....
கடவுளே... லட்டு குரைக்காதிருக்கணுமே...
ஐயோ! போலீஸ்... நான் இங்கேயே இறங்கிடணும்.
பக்கத்தில் இருந்தவர் பெட்டியுடன் அவசரமாக இறங்க - அகிலா பதறிப் போய்...
சார்... உங்க பெட்டியிலே என்...
நமக்குக் கிடைத்த தகவல் சரிதான். குண்டு ஆசாமி சூட்கேஸை எடுத்துட்டு ஓடறான்... பிடி அவனை!
(தொடரும்)

ஆளைப் பார்த்து வேலை கொடுக்க வேண்டும்!

கடிதங்கள்



✉ நரி என்றால் வஞ்சகமும் தந்திரமும் நிறைந்ததுதான் என்று சொல்வார்கள். காட்டு ராஜாவான சிங்கம் யாருக்கு என்ன வேலை தரலாம் என்று தெரியாமல் மாற்றி வேலை கொடுக்க, அதைச் சரி செய்த பெருமை நரியைச் சேரும். வீட்டிலும் அலுவலகத்திலும் நாட்டிலும் ஆளைப்பார்த்து வேலை கொடுத்தால் நல்லதுதானே! ஆசைப்பட்டு அகப் பட்டுக் கொண்ட மானிடமிருந்து மனிதர்கள் கற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

- எம்.எஸ். சுலோசனா,
மன்னார்குடி

✉ கோகுலத்தில் என்னுடைய படைப்பினை பிரசுரம் செய்து என்னைப் போல் உள்ளவர்களுக்கு புத்துணர்வு அளிக்கிறீர்கள். இனிமேல் தொடர்ந்து எழுதுவேன்.

- தி.கா. ஆனந்தன்,
வெள்ளையாம்பட்டு

✉ 'ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...' பகுதியில் வெளியான ஆறுமே நினைத்துப் பார்த்து நெஞ்சில் நிலைக்கக் கூடிய ஆட்டோ கிராஃப்ஸ்!

- ஆர்.ஜி. காயத்ரி,
திசையன்விளை

✉ அழகிய அணிலே! மிக அருமை. நெட் பிட்ஸும் நெகிழ வைத்தது. பல பள்ளிகளின் திறமைகளை வெளியே எடுத்துக் காட்டும் கோகுலத்திற்கு என் பாராட்டுகள்!

- எஸ்.அமீர்ஜான்,
சென்னை

✉ கிளித்தலை இளவரசி நன்றாக இருந்தது. வாண்டுமாமா கதையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

- கே. எல். கந்தரூபி,
தத்தனூர்


✉ இந்தமுறை கவர் ஸ்டோரிக்கு ஒரு எழுத்தை மாற்றினால் போதும். அதுதான் 'பவர் ஸ்டோரி'. உயிர்களிடம் அன்பு வேணும் என்ற உயர்வையும் இந்தப் பூமியின் உரிமையையும் கூறிய விதம் கூட அன்போடு இருந்தது; அழகாக இனித்தது; அருமையாக ஜொலித்தது!

- பி.எஸ்.வளர்மதி,
நெல்லை

சுழல்கோப்பை யாருக்கு?



இந்த ஆண்டு சுழல் கோப்பை திட்டம் அடுத்த மாதத்துடன் முடிவடைகிறது. வெல்லப் போவது எந்தப் பள்ளி? காத்திருங்கள்!



1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி

இந்தப் பரிசுப் போட்டியால் உங்களின் பொது அறிவு விரிவடைகிறது என்று நிறையப் பேர் கடிதம் எழுதி இருக்கிறீர்கள்.


கீழே இருக்கும் ஆறு கேள்விகளுக்கும் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் வாங்கிக் கொள்ளுங்கள். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு, அனுப்பி வையுங்கள்.



மொத்தப் பரிசு
ரூ. 1000/-


சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி:
20.11.2004



நெதர்லாந்து

1. தலைநகரம் __________
2. மொழி __________
3. முக்கிய இடங்கள் __________, __________
4. கரன்ஸி __________
5. நெதர்லாந்து என்றால் __________ என்று பொருள்.



6. இது எந்த நாட்டுக் கொடி?



ஆசிரியர்,
கோகுலம்
கல்கி பில்டிங்கஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

சிறுத்தைப்




பூனைக் குடும்பத்தில் மிகப் பெரிய பிராணி சிறுத்தைப்புலி. இது மாமிசம் சாப்பிடக் கூடிய பாலூட்டி. இதன் உடல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் கறுப்பு வண்ணப் புள்ளிகளுடன் காணப்படும். இந்தப் புள்ளிகள் ரோஜா இதழ்கள் ஒன்றாகச் சேர்ந்தது போல் தெரியும். நடுவில் புள்ளி இருக்காது. இவற்றின் தோல் நிறத்தால் சமவெளிகள், பாறைகள், காடுகளில் எளிதில் கண்களுக்குப் புலப்படாது.

3 முதல் 6 அடி நீளம் வரை இருக்கும். ஆண் சிறுத்தை 36 முதல் 90 கிலோ எடை வரை இருக்கும். பெண் 28 முதல் 60 கிலோ வரை இருக்கும். பெண்ணை விட ஆண் 20% முதல் 40% வரை பெரியதாக இருக்கும்.

பெண் சிறுத்தைப் புலியின் கர்ப்ப காலம் 13 வாரங்கள். 2 முதல் 4 குட்டிகள் வரை ஈனும். குட்டி பொம்மையைப் போன்று மிகவும் அழகாகக் காட்சி தரும்! 8 வாரங்கள் வரை தாய் மிகவும் கவனமாகப் பாதுகாக்கும். அதன் பிறகு எலி, அணில், முயல் போன்ற சிறு விலங்குகளை வேட்டையாடக் கற்றுக் கொடுக்கும். சில சமயத்தில் ஒன்றை ஒன்று துரத்தி விளையாடவும் சொல்லிக் கொடுக்கும் தாய்.

இரவிலும் பகலிலும் சிறுத்தைப் புலி இரை தேடிக் கிளம்பும். ஆடு, மான், முயல், முள்ளம் பன்றி, சிறிய விலங்குகள், பறவைகள், ஊர்வன என எது கிடைத்தாலும் சாப்பிடும். மரத்தின் மேலிருந்தோ, பாறைகளின் மேலிருந்தோ இரையைக் கவனித்து வேட்டையாடும் சிறுத்தைப் புலி. இரை கிடைக்காத காலங்களில் இவை வசிக்கும் இடங்களுக்கு அருகில் இருக்கும் கிராமங்களுக்கு இரவு



புலி



எஸ்.சுஜாதா

நேரத்தில் விஜயம் செய்வதும் உண்டு. மனிதர்கள் வளர்க்கும் வீட்டுப் பிராணிகளை இரையாக்கிக் கொள்ளும்.

சிறுத்தைப் புலி நன்றாக மரம் ஏறும். ஓய்வு நேரங்களில் பெரும்பாலும் மரங்களில் உட்கார்ந்து பொழுதைக் கழிக்கும்.

மனிதர்களை விட 5 மடங்கு மிகவும் நுட்பமான சத்தத்தையும் சிறுத்தைப் புலிகளால் கேட்க முடியும்.

பூனைக் குடும்பத்தில் சிறுத்தைப் புலிகள் நன்றாக நீந்தக் கூடியவை. மணிக்கு 58 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக் கூடியவை. 3 மீட்டர் உயரத்துக்கு தாவிக் குதிக்கக் கூடியவை.


இவற்றிற்கு வலிமை அதிகம். இறந்த பிராணியை வாயில் கவ்விய படி 50 அடி உயர மரத்தில் ஏறக் கூடியவை. செந்நாய்களும் கழுதைப் புலிகளும் சிறுத்தைகளை விரட்டி விடுவதுண்டு. சிறுத்தைப் புலிகளுக்கு ஆப்பிரிக்காவில் சிங்கங்களும் ஆசியாவில் புலிகளும் எதிரிகளாக இருக்கின்றன.

இவற்றில் நிறைய வகை உண்டு. பாலைவனத்தில் வாழும் சிறுத்தைகள் வெளிர் மஞ்சள் நிறத்திலும் காடுகளில் வசிப்பவை ஆழ்ந்த மஞ்சள் நிறத்திலும் உயரமான மலைப் பிரதேசத்தில் வாழ்பவை பிரௌன் நிறத்திலும் காணப்படுகின்றன. கறுப்பு நிறச் சிறுத்தைகளும் உண்டு.

சிறுத்தைப் புலிகளின் சராசரி ஆயுட்காலம் 12 முதல் 15 ஆண்டுகள். உயிரியல் பூங்காக்கில் 23 ஆண்டுகள் வரை கூட இவை வாழ்கின்றன.








மிக்ஸர் பிட்ஸ்




சீமை ஆலமரம் என்று அழைக்கப்படும் ஓக் மரத்தில் வினோத மான பூச்சி வாழ்கிறது. இந்தப் பூச்சி பார்ப்பதற்கு வெட்டுண்ட இலை போல் தோற்றமளிக்கும். தோற்றத்தில் இலை போன்ற அமைப்புடையதால் எதிரி களிடம் இருந்து தப்பித்து விடுகிறது. அது மட்டுமல்லாமல், இலையுதிர் காலத்தில் இலைகள் பழுப்பு நிறம் அடையும்போது,



இந்தப் பூச்சியின் நிறமும் இலைகளின் நிறத்திற்கேற்ப மாறுபடுகிறது.

- என். ஜரினாபானு, திருப்பட்டினம்


நிலா நம்மிடமிருந்து வெகு தொலைவில் உள்ளது. வெகு தொலைவில் உள்ள பொருள் களை நாம் பார்க்கும் கோணம், நாம் நகர்வதால் மாறுவதில்லை. அதாவது நாம் நகர்ந்து கொண்டே நிலாவைப் பார்த்தால், பார்க்கும் கோணம் மாறாது. அதனால்தான் நிலா நம் கூடவே வருவது போலத் தெரிகிறது.




- கு. அருணாசலம், தென்காசி

சீனாவில் சைதுங் என்ற பாலம் உள்ளது. இதன் நீளம் சுமார் முக்கால் கிலோ மீட்டர். இப்பாலம் முழுக்க முழுக்க

கடற்கரையோ, ரயில் வசதியோ, சாலை வசதியோ இல்லாத நாடு 'லாவோஸ்'. 2 லட்சத்து 36 ஆயிரத்து 800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அந்த நாட்டில் உள்ள ஒரே போக்குவரத்து, 'படகு' போக்குவரத்து மட்டுமே.




பாலம்!



இம்மாதத்தில் இந்தியா, ஆசியா, ஜப்பான் போன்ற ஒரே வரிசையில் உள்ள நாடுகளில் அதிகாலை நேரத்தில் அதிக அடர்த்தியாயுள்ள ஆக்ஸிஜன் நிறைந்த குளிர் காற்று வீசும். அந்தக் காற்றை உடம்பில் படும்படியும் சுவாசிக்கவும் செய்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

- மா. அழகுராஜன்,
இராஜபாளையம்

உலகில் மிக அதிகமான மொழிகள் பேசப்படும் நாடு பாப்வா நியூகினியா.



இதன் அலுவல் மொழி ஆங்கிலம். ஆனால் சுமார் 715 வட்டாரக் கிளை மொழிகள் இங்கு பேசப்படுகின்றன.

பீங்கானால் ஆனது.

- கி.சௌந்தரவல்லி,
திருவிடைமருதூர்

அலங்காரச் செடி என்னும் நிலையிலேயே உருளைக்கிழங்கு தென்னமெரிக்காவிலிருந்து 1539-ல் ஐரோப்



பாவிற்கு அறிமுகம் செய்யப்பட்டது.


- அ. அந்தோணிஸ்டீபன்,
இராமநாதபுரம்

உயிரினங்களில் மிக மெல்லிய தோல் உள்ள மிருகம் காண்டா மிருகம்.

மிக தடிப்பான தோல் உள்ளது ஷார்க் மீன். தோலின் கனம் 4 செண்டிமீட்டர்.

இடைவெளி, கமா, கோலன், செமி கோலன் போன்றவற்றை அறிமுகப்படுத்தியவர்கள் கிரேக்கர்கள்.

- ராகவ்,
சென்னை.



நம் நாட்டில் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து குளித்து முடித்து இறைவனைத் தொழும் பழக்கம் இன்றும் உள்ளது.



நீரில் குதித்த



ஸ்ரீரங்கத்துக்குத் தெற்கேயுள்ள நம்பூரில் பிறந்தவர் நம்பிள்ளை.

கூட்டம் அதிகம் வந்ததால் அவர் மாளிகையில் இடம் போதவில்லை. ஒரு பெண்மணி தினமும் அவருக்குக் காய்ச்சிய பாலில் பனங்கற்கண்டு, குங்குமப்பூ, மிளகு முதலானவற்றைச் சேர்த்துக் கொண்டு வருவாள்.

ஒருநாள் அவளிடம், ''சுதா காலட்சேபம் நடத்த இடம் போதவில்லை. உங்கள் வீட்டில் நீங்கள் ஒருவர்தான் என்று கேள்விப்பட்டேன். உங்களுக்கு சிறிது இடம் போதாதோ? பெரிய கூடத்தையும் அதையொட்டிய தாழ்வாரத்தையும் பிரவசனத்துக்குத் தந்து உதவ வேண்டும்'' என்று கோரினார்.

அவளும் மகிழ்ச்சியோடு ''தாராளமாகத் தருகிறேன். எனக்கும் வைகுண்டத்தில் ஓர் இடம் தந்தருள வேண்டும்'' என்றாள்.

''அம்மா, வைகுண்டம் என்னுடையதில்லையே! பரந்தாமனிடம் வேண்டி வாங்கித் தருகிறேன்'' என்றார் நம்பிள்ளை.

அந்தப் பெண் ''ஸ்வாமி, நான் பெண் ஆனதால் எவரும் என்னைச் சுலபமாய் ஏமாற்றி விடலாம். பெருமாளுக்கு நான் ஒன்றும் பெரிதாய் செய்து விடவில்லை.

''அழைத்து வருகிறேன் என்றேனா அக்ரூரரைப் போலே!

மனம் பறிகொடுத்தேனா ஆண்டாளைப் போலே!

திருவடியைப் பெற்றேனா அகலிகையைப் போலே!

கனி சேர்த்து காத்திருந்தேனோ சபரியைப் போலே!

நீரில் குதித்தேனோ கண்ணபுரத்தாளைப் போல!''

இப்படி 81 பக்தர்களைச் சிறப்பித்துப் பாடியவள், ''ஓர் ஓலையில் வருஷம், மாதம், நாள் போட்டு பரமபதம் கிடைக்கும் என்று எழுதித் தாருங்கள்'' என்றாள்.

நம்பிள்ளை புன்னகையுடன் அவள் சொன்னபடி எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தார். அது அன்றைக்கு மூன்றாம் நாள். 'நிஜமாகவா!' என பரவசமடைந்தாள்.

''உங்களுக்குத்தான் என் வார்த்தையில் எத்தனை நம்பிக்கை. கண்ணபுரத்தாளை இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது'' என்றார்.

''ஸ்வாமி! நான் சீடர்கள் மூலமாகக் கேள்விப்பட்டதுதான். ஆனாலும் தங்கள் திருவாக்கால் அதை நெஞ்சில் நிரப்பிக் கொள்ள ஆசையாயிருக்கிறது'' என்று வேண்டினாள்.

''அதை எப்படி மறக்க முடியும்?

கண்ணபுரத்தாள்!

ஆர். பொன்னம்மாள்

திருவெள்ளறைப் பெருமாளைத் தரிசனம் செய்து விட்டுத் திரும்புகிறேன். கூட நான்கு சிஷ்யர்கள். காவேரியில் நுங்கும் நுரையுமாக வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. ஒரே ஒரு பரிசில்தான் இருந்தது. ராத்திரி நேரம் மழையோடு காற்றும் சேர்ந்து கொண்டது.

''வழிப் போக்கர் இருவரும் ஏறிக் கொண்டனர். அதில் ஒருத்தி பெண். ஊர் 'கண்ணபுரம்' என்றாள். பெயர் கேட்கவில்லை. தண்ணீர் வந்து கொண்டே இருந்ததால் படகு அலைக்கழிக்கபட்டு மூழ்கி விடுமோ என அனைவரும் பயந்தனர்.

''படகு கரை சேருமா? எனக் கேட்டேன்.

''பாரம் அதிகம் சாமி! நீச்சல் தெரிஞ்ச யாராவது ஒருத்தர் குதிச்சாலும் போதும். சமாளிச்சுடலாம்'' என்றான் படகோட்டி.

''எனக்கோ, சீடர்களுக்கோ நீச்சல் தெரியாது. படகோட்டிக்கு நீச்சல் தெரிந்தாலும் அவன் குதித்தால் யார் படகோட்டுவது? வழிப் போக்கர்களும் நீச்சல் தெரியாதென்றார்கள்.

''திடீரென்று கூட வந்த பெண் எழுந்து நின்றாள். ''தாழிக்காரா! நம்பிள்ளை வைஷ்ணவ ஆச்சார்யாள். பத்திரமாக அவரைக் கரை சேர்த்துவிடு'' என்று சொல்லியபடி கண் இமைக்கும் நேரத்தில் நீரில் குதித்து விட்டாள்.

''மனம் பதைத்தது! என்ன காரியம் பண்ணிவிட்டாள் என்று துடிதுடித்தேன். சீடர்களும் கண்ணீர் விட்டனர். நமக்காக உயிர்த் தியாகம் பண்ணிவிட்டாளே என்று என் எலும்பெல்லாம் உருகியது. ஓடம் கரை சேர்ந்தது. அருகிலிருப்பவரையே பார்க்க முடியாத மை இருட்டு!

''அப்பா! போய் விடாதே! குரல் கொடு, பெருமாள் பக்தர்களைச் சோதிப்பார். ஆனால் கைவிட மாட்டார். உனக்கு நிறையப் பணம் தருகிறேன். சோர்வடையாமல் மறுபடி போய்த் தேடு'' என்று பரிசலோட்டியைக் கேட்டுக் கொண்டேன்.



"பகவானே! காப்பாற்று" என்று அரற்றிக் கொண்டிருந்தேன்.

பரிசலோட்டி "அம்மா, தாயே! பிழைத் திருக்கிறீர்களா? குரல் கொடுங்கள்" என்று கூவிக் கொண்டே காவிரி வெள்ளத்தில் அலைந்தான்.

"நான் பத்திரமாக இருக்கிறேன். கவலை வேண்டாம்" என்று மெல்லிய பதில் குளிரின் நடுக்கத்தோடு கேட்டது. நாங்கள் மெய்சிலிர்த்தோம். இறைவனுக்கு நன்றி சொன்னேன். தியாகம் செய்தது அந்தப் பெண்ணுக்குப் பெருமையாயிருக்கலாம். என் வாழ்க்கையின் கறையை எதைக் கொண்டு அழிப்பது! பழி நேராமல் காத்தது பரந்தாமன் கருணையல்லவா?

"நாணல் புதர் காலில் சுற்றிக் கொள்ள மணல் மேட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறாள். "ஆற்றிலேயும் மேடாய் நின்று என்னைக் காத்த தயாநிதியே" என்று காலில் விழுந்தாள்.

"அவள் நம்பிக்கை அது! எனக்கு அவளை முகம் சுளிக்காது திருப்பி அழைத்து வந்த பரிசலோட்டியும் கடவுளாகவே தெரிந்தான். உயிரை மட்டுமல்ல. மன உறுத்தலோடு மடியாமல் காத்த அவள் என்னை மீண்டும் பிறப்பித்த தாய்!" நம் பிள்ளை உருக்கமாக சொல்லி முடித்தார்.

அவர் விழிகள் மட்டுமல்ல! கூடியிருந்தவர் கண்களும் பனித்திருந்தன.

எல்லாவற்றையும் விட ஆச்சரியம்! வீட்டை உபன்யாசத்துக்குக் கொடுத்த மங்கை மூன்றாம் நாள் பரமபதமடைந்தது தான். நம் பிள்ளையின் வாக்கை தன் வாக்காக நடத்தியிருக்கிறார் பகவான்.

யாருக்கு, எத்தனைப் பட்டாசு?

இந்தத் தீபாவளியை கோகுலத்துடன் கொண்டாட மிகவும் சுவாரசியமான விளையாட்டு. இதை இருவர் விளையாடலாம். முதலில் கீழே உள்ள சதுரத்தை வெட்டி, அட்டையில் ஒட்டுங்கள். பிறகு அதை 20 சதுரங்களாக வெட்டிக் கொள்ளுங்கள். இதை ஒரு டப்பாவில் போட்டு வையுங்கள்.

1	2	3	4	5
1	2	3	4	0
1	2	3	0	x
1	2	0	x	x

இதே போல் 40-41ஆம் பக்கங்களில் உள்ள சிவப்பு வண்ணப் பட்டாசை வெட்டி அட்டையில் ஒட்டி வைக்கவும். அதே போல் பச்சை வண்ணப் பட்டாசையும் செய்யவும். இப்போது தலா 24 பட்டாசுகள் இருக்கும்.

சிவப்பு வண்ணத்தை ஒருவரும் பச்சை வண்ணத்தை ஒருவரும் வைத்துக் கொள்ளுங்கள்.

இனி விளையாட ஆரம்பிக்கலாம். டப்பாவை நன்கு குலுக்கி ஆளுக்கு ஓர் அட்டையைக் கண்களை மூடிக் கொண்டு எடுக்க வேண்டும்.



எடுத்த அட்டையில் என்ன எண் உள்ளதோ, அதன்படி அத்தனை பட்டாசுகளைப் படத்தில் உள்ள பட்டாசுகளின் மேல் வைக்க வேண்டும். உதாரணமாக ஒருவருக்கு 5 வந்தால் 5 பட்டாசுகளைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

0 விழுந்தால் ஆட்டம் கிடையாது. பட்டாசு வைக்கக் கூடாது.

x வந்தால் வைத்த பட்டாசுகளில் 4ஐ எடுத்து விட வேண்டும்.

டப்பாவில் ஒரு முறை வைத்த அட்டையை மீண்டும் டப்பாவுக்குள் போட வேண்டாம். ஆட்டக்காரர்கள் இருவரும் மாறி, மாறி எடுக்க வேண்டும். அட்டைகள் தீர்ந்ததும் ஆட்டம் முடிந்து விடும்.


ஆட்டம் முடிவில் யார் அதிக பட்டாசுகளைக் கைப்பற்றியிருக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர். 40ஆம் பக்கத்திற்குச் செல்லுங்கள். விளையாடி மகிழுங்கள்!

படம்: லலிதா

தேடி வந்து பரிசு கொடுத்தார்!

என் ஆசிரியர்

நான் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். நான் எவ்வளவோ முறை படித்தும், வானவெளியில் உள்ள 9 கிரகங்களின் வரிசையை மறந்து விடுவேன். இதைக் கவனித்த என் ஆசிரியை, நான் மறக்காமல் இருப்பதற்காக ஒரு வழியைக் கூறினார். அதாவது, My very excellent mother Just now showed us nine planets' என்ற வரியை ஞாபகம் வைத்துக் கொண்டால் கிரகங்களின் வரிசையை Mercury, Venus, Earth, Mars, Jupiter, Saturn, Uranus, Neptune, Pluto என்று மறக்காமல் எழுதிவிடலாம்.



நான் சரியாகப் படிக்கவில்லை என்று என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு, அடிக்காமல், எனக்குப் புரியும்படி பாடம் நடத்திய அந்த ஆசிரியைப் போல அனைத்து ஆசிரியர்களும் இருந்துவிட்டால் மாணவர்கள் பள்ளிக்கு உற்சாகமாகச் செல்வர்.

- எம். வினோத், சங்கரன்கோவில்

எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது என் சமூக அறிவியல் ஆசிரியர் குணசேகரன் நடக்கப் போகின்ற ஆண்டு இறுதித் தேர்வில் யார் சமூக அறிவியல் பாடத்தில் முதல் மதிப்பெண் வாங்குகிறார்களோ அவர்களுக்கு அடுத்த வருடப் படிப்பிற்கான புத்தகம், நோட்டுகள் பரிசு என அறிவித்தார். இத்தேர்வில் முதல் மதிப்பெண் நானும் என் நண்பனும் பெற்றோம். அதே நேரம், அப்பள்ளியைவிட்டு வேறு பள்ளிக்குச் செல்ல வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. நான் பள்ளிக்குச் சென்று பதிவுத்தாள் வாங்கும்போது அந்த ஆசிரியர் வரவில்லை. என்ன இது, பரிசு பெற்றும் கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தில் சென்ற எனக்கு இன்ப அதிர்ச்சி! ஒரு மாதத்திற்குப் பிறகு அந்த ஆசிரியர் புத்தகம் நோட்டிற்கான பணத்தை வீடு தேடி வந்து கொடுத்த காட்சி இன்னமும் என் மனக்கண்ணை விட்டு அகலவில்லை!

- பி. விஜயபாரதி, புதுக்கோட்டை



நான் டி.வி.எஸ். அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறேன். என்னைக் கவர்ந்த ஆசிரியர் எங்களுக்கு சமூக அறிவியல் பாடம் பயிற்றுவிக்கும் செல்வஜோதி. பொதுவாகவே மாணவர்களுக்கு வரலாறு, புவியியல் என்றாலே போர்தான். ஆனால் அவை என் ஆசிரியரால் நடத்தப்படும்போது பொலிவு பெற்றுவிடும். குறிப்பாக வரலாற்று நிகழ்வுகளைத் தற்போது நடப்பதுபோல அவர் சுவைபட விளக்கும்போது கொட்டாவி விடும் மாணவர்கள் கூட சுறுசுறுப்பாகி விடுவார்கள். எந்தச் செய்தியையும் சுவை படக் கூறுவதில் அவருக்கு நிகர் அவரே! பயிற்சிகள் தருவதிலும் வல்லவர்.

- சே. நம்பி கிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு, டி.வி.எஸ். அரசு மேல்நிலைப் பள்ளி, திருக்குறுங்குடி


யாருக்கு,
எத்தனைப்
பட்டாசு?
—விளையாட்டு


க்கம்
ம் பக்கம்



வியர்வையில்

அந்த மன்னன் ஒரு மாவீரன். ஏழைகளிடம் அன்பும் இரக்கமும் கொண்டவர். எதையும் தானமாக வழங்கக் கூடியவர். எதிலும் நியாயம் தவறாத நேர்மையாளர். தவறு செய்பவரையும் மன்னிக்கும் இயல்பு உடையவர். எதிரிகளிடமும் அன்பும் பரிவும் காட்டுபவர்.

அந்த நாட்டில் தீனன் என்று ஒரு முதியவர். சிற்பி. உழைப்பாளி. கடமை தவறாதவர்.

ஒருநாள், அவர் வீட்டினுள் மரப்பலகை ஒன்றில் சிவ பெருமானின் உருவத்தைச் செதுக்கிக் கொண்டிருந்தார். அப்போது, வெகு தூரத்தில் ஏதோ மேளதாள ஒலி. சிற்பி அதைக் காதில் வாங்கவே இல்லை.

அந்நாட்டு அரசர், அந்த ஊருக்கு வெளியில் கூடாரம் இட்டுத் தங்கித் தனது பரிவாரங்களுடன் ஊருக்குள் வந்து கொண்டிருந்தார்.

ஊர்வலம் மெல்ல மெல்ல அருகில் வரத் தொடங்கியது. தெரு நெடுகிலும் மக்கள் கூடி நின்று ஜயகோஷம் எழுப்பி அரசரை வரவேற்றனர்.

அந்த ஆரவாரம் எதுவும் சிற்பியின் காதில் விழவில்லை. அவர் கவனம் முழுதும் சிவனின் உருவத்தில் பிறைச் சந்திரனைச் செதுக்குவதிலேயே லயித்திருந்தது.

அரசர் சிற்பியின் வீட்டு வாசலுக்கே வந்துவிட்டார். அப்போதும் சிற்பி எழுந்து வெளியில் வரவில்லை. அதை அரசரின் வீரர்கள் கவனித்து விட்டனர். அவர்கள் தவறாகக் கருதிவிட்டனர். அரசனை அவமதிப்பதற்காக, வேண்டும் என்றே சிற்பி வெளியில் வரவில்லை என நினைத்து, அவரைக் கைது செய்து அழைத்துச் சென்று விட்டனர்.

அன்று மாலை, கூடாரத்தில் சிற்பி அரசர் முன்பு கொண்டுபோய் நிறுத்தப்பட்டார். வீரர்களிடம் அரசர், ''இந்த முதியவர் செய்த குற்றம் என்ன...?'' என்றார்.

உடனே அவர்கள், ''அரசே! தங்களது ஊர்வலம் இன்று காலை தன் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டபோதிலும் தங்களைக் காண இந்தக் கிழவன் வீட்டை விட்டு வெளிவரவில்லை. தங்களை இவன் அவமதித்து விட்டான்'' என்றனர்.

அதைக் கேட்ட அரசனிடம் புன்முறுவல். பிறகு, ''இந்தப் பெரியவர் மீது நீங்கள் சுமத்தியுள்ள குற்றச் சாட்டு நியாயமானதாக எனக்குத் தோன்றவில்லையே! மாறாக நீங்கள் எல்லாம்தான் இம் முதியவரின் வயதுக்குக் கூட மதிப்பு அளிக்காமல் 'அவன் இவன்' என்று இவரை அவமதிப்பதாக எனக்குத் தோன்றுகிறது... நமது ஊர்வலம் தன் வீட்டு வாசலில் வருவதை இவர் அறியாமல் கூட இருந்திருக்கலாம் அல்லவா...?'' என்றார்.

பிறகு, அரசர் முதியவரிடம், ''அச்சம் வேண்டாம். சொல்லுங்கள். நீங்கள் ஏதும் தவறாக நடந்து கொண்டீர்களா...?'' என்றார் அன்புடன்.

''ஆம் மகாராஜா...! நான்தான் தங்களுக்கு அவமானம் இழைத்துவிட்டேன்... ஆனால் ஒன்று... அதை நான் வேண்டும் என்றே செய்யவில்லை...'' என்று சிற்பி தலை கவிழ்ந்தார்.

''அப்படி சொல்லாதீர்கள் பெரியவரே... உங்களைப் போன்ற



மகிழ்கிறார் கடவுள்!

ஜானகிமணாளன்

முதியவர்கள் இருப்பதுதான் இந்த நாட்டுக்குப் பெருமை. நீங்கள் தலை கவிழ்ந்து நிற்பது சரியல்ல. என் ஊர்வலம் அங்கு வரும்போது உள்ளே நீங்கள் என்னதான் செய்து கொண்டிருந்தீர்கள்...?'' என்றார்.

''அச்சமயம், நான் சிவனின் உருவத்தை செதுக்கிக் கொண்டிருந்தேன். தங்களது வருகையை உணரவில்லை'' என்றார் சிற்பி.

உடனே அரசர், ''தாங்கள் ஒரு சிற்பக் கலைஞரா...? இந்தத் தள்ளாத வயதிலும் கலையின் மீது இத்தனை லயிப்பா? உங்களைப் போன்ற உண்மையான உழைப்பாளியைப் பெற்று இருப்பது இந்த நாட்டின் பெரும் பாக்கியம்...'' என்றார்.

''யார் செய்தாலும் தவறு தவறு தானே அரசே...? தண்டனை என்னவோ, அதை ஏற்க நான் தயார்...'' என்றார் சிற்பி.



''தங்கள் பெயர் என்ன?'' என்றார் அரசர்.

''என்னை எல்லாரும் 'சிற்பி தீனன்' என்பார்கள்...'' என்றார்.

உடனே அரசரிடம் ஆச்சர்யம்! ''என்ன? தாங்கள் தான் அந்தச் சிற்பி தீனனா? என்னுடைய வீரர்கள் தான் தங்களிடம் தவறாக நடந்து கொண்டு விட்டனர். அரசர் என்ற என் கௌரவத்தைவிட, உழைப்பாளி என்ற உங்கள் கௌரவம் தான் மிக மிக உயர்வானது. அரசன் என்ற நான் இந்த நாட்டின் பாதுகாவலன் மட்டுமே... ஆனால், உழைப்பாளி ஆகிய தங்களைப் போன்றவர்கள்தான் இந்த நாட்டையே உருவாக்குபவர்கள்'' என்ற அரசர், தன் அமைச்சரை அழைத்து, ''இத்தனைக் காலம் இவர் நாட்டுக்காக உழைத்திருக்கிறார். தனது குடும்பத்துக்கு என்று எதையும் இவர் தேடிக் கொண்டு இருந்திருக்க மாட்டார். எனவே, இவரது குடும்பத்தினரின் சுகவாழ்வுக்கு நமது அரசு ஏதாவது செய்தே ஆக வேண்டும். எனவே, இந்தச் சிற்பிக்குக் கொஞ்சம் நிலத்தை ஒதுக்கிக் கொடுங்கள்'' என்று உத்தர விட்டார்.

அதற்குள் குறுக்கிட்ட சிற்பி, ''தங்கள் அன்புக்கு மிக்க நன்றி அரசே...! ஆனால் அந்த நிலம் எனக்கு வேண்டாம்...'' என்று வேண்டினார்.

அரசரிடம் மிகுந்த ஆச்சர்யம், ''ஏன் நிலம் வேண்டாம் என்கிறீர்கள்?'' என்றார்.

சிற்பி, ''ஐயா! இந்தச் சிற்பி தீனனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் கடும் உழைப்புதான் சொத்து. அதைக் கொண்டே அவர்களால் வாழ்ந்து விட முடியும். 'வியர்வைத் துளிகளில்தான் கடவுள் மகிழ்ச்சி அடைகிறார். அந்த வியர்வைதான் தேவாமிர்தம். என் குழந்தைகள் அதைக் கற்றால் போதும்...''

உடனே, அரசர் தனது ஆசனத்தை விட்டு எழுந்து, அவருடைய இரு கைகளையும் பற்றி தனது வீரர்களின் செயலுக்கு, தான் மன்னிப்புக் கேட்டவாறு விடை கொடுத்து அனுப்பினார்.

உழைப்பை மதித்த அந்த மன்னர் ஹர்ஷ வர்த்தனர்.



தீபாவளித் திருநாள்!

வருடம் முழுவதும் நம் வீடுகளில் எத்தனையோ விழாக்கள் வந்து போகின்றன. ஆனால் கவர்ச்சிகரமானதும் ஈர்ப்பு சக்தியுள்ளதும் குடும்பத்தினர் அனைவரையும் சந்தோஷக் கடலில் நீந்த வைக்கும் ஒரே




விழா தீபத் திருநாளான தீபாவளி மட்டுமே! வருடங்கள் ஆக, ஆக, பாரம்பரிய குணங்களுடன் நம் கற்பனை, கலை நுணுக்கங்களையும் நவீன வசதிகளையும் இணைத்தே இத்திருவிழாவைக் கொண்டாடுகிறோம்.

தீபாவளி ஒரு புனிதமான பாரம்பரிய திருவிழா; இருளை, ஒளியால் மூழ்கடித்து வென்றதன் அடையாளம் தான் 'தீபத் திருநாள் பண்டிகை'. உலகிலுள்ள இந்தியர்கள் அனைவரது வாழ்வின் வெற்றிக்கும் வளமைக்குமான கோலாகல கொண்டாட்டப் பண்டிகை! இதற்கான தயாரிப்புகள், மதச் சடங்குகள், புத்தாடைகள் என சந்தோஷச் சூழல் குடும்பத்தையே சுற்றி வளைத்துக் கொள்கிறது. உலகிலுள்ள இந்தியர்கள் எல்லாம் ஆங்காங்கே ஒன்றிணைந்து, மனமுவந்து, மகிழ்ச்சியில் ஆடிப்பாடி, வாழ்த்துகளையும் இனிப்புகளையும் பகிர்ந்து கொள்ள வைக்கிறது.

இந்தியாவில் மட்டுமின்றி பிரிட்டிஷ் கயானா, பிஜி தீவுகள், மலேஷியா, நேபாளம், மொரீஷியஸ், பர்மா,



சிங்கப்பூர், இலங்கை, டிரினிடாட், டைபாகோ, இங்கிலாந்து, இந்தோனேஷியா, ஜப்பான், தாய்லாந்து, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் தென் அமெரிக்காவில் வாழும் இந்தியர்களும்





மோகனா

இந்தியர்களின் வழிவந்தவர்களும் பாரம்பரிய சந்தோஷத்துடன் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

மொரீஷியஸில் 68% இந்தியர்கள் வாழ்கின்றனர்; 80 சதம் மக்கள் இந்து மதத்தையே பின்பற்றுகின்றனர். ராமன் பதினான்கு ஆண்டுகள் காடு சென்று, மீண்டும், முடி சூடிய நாளை தீபாவளியாகவும், அன்று 'லக்ஷ்மி' செல்வ தேவதையாக வீட்டுக்குள் வருவதாகவும் நம்புகின்றனர். பட்டாசு கொளுத்தி, வெடி வெடிப்பது கெட்ட ஆவிகளை விரட்டவே என்று ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். கரிபியன் தீவிலுள்ள 'டிரினிடாட்' பகுதியில் வாழும் இந்தியர்கள் அனைவரும் இந்தியாவின் பூர்வ குடிகள்! இங்கு தீபாவளியன்று இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்த்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். அன்று, அங்கு நடைபெறும் விழாக்களிலும், விருந்துகளிலும் கூட, அந்நாட்டு அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர். தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் ஒரு வாரம் நடைபெறுகிறது. அங்குள்ள கலாசாரக் குழுவில் 'தீபாவளி நகர்' என்ற பகுதி அனைவரையும் ஈர்க்கும் மையமாக உள்ளது.

மலைகளால் மாலை சூடப்பட்ட நேபாளம், நமது பக்கத்து நாடு. இங்கு தீபாவளி 'தீகார்' என்று அழைக்கப்படுகிறது. வளமைக்கும் செல்வத்துக்கும் கணபதியையும் திருமகளையும் தொழுகின்றனர். நேபாளத்தில் தீபாவளி 'ஐந்து தினங்கள்'. ஒவ்வொரு நாளுக்கும் தனி முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். முதல் நாள் அரிசி சமைத்து, பசுவுக்கு படைக்கப்படுகிறது. மேலும் திருமகள் பசுவின் மேல் அமர்ந்து, அவர்கள் இல்லத்துக்கு வருவதாக நம்புகின்றனர். இரண்டாம் நாள் 'நாய்'க்கான நாள்; பைரவர் என்ற கடவுள், நாய் வாகனத்தில் வருகிறார் என்கின்றனர்; நாய்களுக்காகவும் தங்களுக்காகவும் அறுசுவை உணவு தயாரிக்கின்றனர். மூன்றாம் நாளை வீட்டை தீபத்தால் அலங்கரித்து, விளக்குத் தோரணங்கள் அமைத்து, இல்லத்தை ஒளி மயமாக்குவர்; தீப ஒளி, தின்பண்டங்கள், பட்டாசுகள் என 'தூள்' கிளப்புவார்கள். நான்காம் நாள், 'யமனுக்கு' அர்ப்பணிக்கப்படுகிறது; தங்களுக்கு நீண்ட ஆயுள் வேண்டும் என யமனுக்கு வேண்டுகோள் விடப்படுகிறது; கடைசிநாளான ஐந்தாம் நாள் 'பாஜா தூஜ்' என சகோதரர்களுக்காக அர்ப்பணிக்கப்படும். அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும் சகோதரிகளின் வளமான வாழ்க்கைக்காகவும் பிரார்த்திக்கப்படுகிறது.

மலேஷியாவில் இந்தியர்கள் 8%



மட்டுமே இருந்தாலும் 'கெட்டதை நல்லது வெற்றி' கொள்ளும், 'ஹரி தீபாவளியாக, இந்து சூரிய காலண்டரின், ஏழாம் மாதத்தில் கொண்டாடப்படுகிறது. தீப ஒளி விருந்துக்கு முன்னர், எண்ணெய் தேய்த்து குளித்து, கோயில்களுக்கும் அருகிலுள்ள வீடுகளுக்கும் சென்று வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். அசுரன் இராவணனை அழித்ததற்காக, இராமனுக்கு மண் விளக்கில் தேங்காய் எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றுவர்.


பிரிட்டிஷ் கயானா, தென் அமெரிக்காவுக்கு வட கிழக்கே உள்ளது. 7, 70,000 இந்தியர்கள் வாழும் இவ்விடத்தில் தீபாவளிக்கு அரசு விடுமுறை விடப்படுகிறது. இந்தியர்கள் அங்கே சென்று வாழத் துவங்கிய கி.பி.1853லிருந்து தீபாவளி கொண்டாடப்படுகிறது. புத்தாடை புனையும்போது நல்ல உடல் நலமுள்ள உடலில், நல்ல ஆத்மா வந்து இறங்குவதாக நம்புகின்றனர்.

புலம் பெயர்ந்த இந்தியர்கள் நிறையப் பேர் வாழ்வது தென் ஆப்பிரிக்காவில்தான்! இங்கு இந்தியர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் இணைந்து தீபாவளி கொண்டாடுகின்றனர். இங்கிலாந்தில் வாழும் இந்திய பூர்வ குடிகள் மிகச் சொற்பமே! தாய் நாட்டிலிருந்து தொலைவில் இருக்கும் உணர்வை மறக்கவே, இவர்கள் தீபத் திருநாளில் தீபம் ஏற்றி, சங்கு ஊதி, திருமகளை வழிபட்டு வாழ்த்துகள் பரிமாறிக் கொள்கின்றனர்.

பர்மா, ஜப்பான், இலங்கை போன்ற நாடுகளில் தீபங்களால் ஆன தோரணங்கள் தொங்கவிடப்படுகின்றன. பாரம்பரிய ஆடல், பாடல் நிகழ்வுகளை நடத்துகின்றனர்.

சிங்கப்பூரில் இந்தியா போலவே தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதற்காக புதுப்புது தெருக்கள் உண்டாகின்றன.

இலங்கையில் பேப்பரால் செய்த கலைப் பொருள்களின் தோரணங்களையும் விளக்குகளையும் மரங்களின் கிளைகளில் தொங்க விடுகின்றனர். படகோட்டம் நடைபெறும். வழிபாட்டு இடங்களில் கண்ணைக் கவரும் வண்ண, போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன.




தாய்லாந்தில், வாழை இலையில் செய்யப்பட்ட விளக்குகளையும் மெழுகுவத்தியையும் நாணயங்கள் வைத்து, ஆற்றில் மிதக்கவிட்டு அனுப்புவர்.

ஆஸ்திரேலியாவில், இந்தியர்கள் குழுக்கள் அமைத்து தீபாவளியை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

நம் நாட்டிலும் பல்வேறு மாநிலங்களில் வெவ்வேறு காரணங்களுக்காக தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளி மட்டுமின்றி குழந்தைகள் தினமும் வருகிறது. இந்த நல்ல நாட்களில் அனைவரும் ஒற்றுமையுடன் பண்டிகைகளைக் கொண்டாடுவோம்.

அட்டையில்: **ரேவதி, சரண்யா, ஜெயந்தி**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**



புத்தகம் படித்தால் பண்டிதனாகலாம்!

எங்கள் எண்ணங்கள்...

புத்தகத்திற்கு நேரம் ஒதுக்குங்கள், அது அறிவின் ஊற்று. 'கண்டதைப் படித்தவன் பண்டிதனாவான்' என்பது பழமொழி. ஒரே மாதிரியான புத்தகத்தை வாசிப்பதை விட்டுவிட்டு விதவிதமாக வாசிப்பதால் அறிவு விசால மாகும். பரீட்சை விடுமுறைகளில் அவசியம் ஒவ்வொரு மாணவரும் நூலகம் போக வேண்டும். மாலையில் விளையாடுகிறபோது அவசியம் விளையாட வேண்டும். விளை யாட்டுக்கு உடல் வலிமை. புத்தகம் வாசிப்பது மன வலிமை தரும். மனம் சுத்தமாகும். நம்மை நாமே ஆராய உதவும். உண்மையான நண்பன் நல்ல நூல்களே.

- சு.காந்திராஜ், செங்கை



பேய்க் கதைகளைப் படிப்பது குற்றமல்ல; எப்போதாவது படிக்கலாம். சிலர் பேய்க் கதைகளைப் படித்து விட்டுப் பயந்து இரவில் அலறுவது; வேண்டாத எண்ணங்களை மனதில் நினைத்து மன அமைதியைக் கெடுப்பது இதெல்லாம் தேவைதானா? நம் அறிவுக்குத் தீனிபோடும் புத்தகங்களைப் படிப்பது தான் நல்லது. பேய்க் கதைகளைப் படித்துப் படித்து, அப்புறம் நம் மூளை நல்ல வழியில் யோசிக்கவே செய்யாது. அதனால் பேய்க் கதைகளை அரிதாகப் படிப்பது நல்லது.

- ஆர். அம்பிகா, மதுரை


பேய்க் கதைகளைப் படிக்கலாமா, படிக்கக் கூடாதா? என்ற விவாதத்தில் விவேக்கின் கட்சிதான் நான். அப்படிப்பட்ட கதைகளைப் படிக்கும்போது ஏற்படும் த்ரில் மட்டுமல்லாது பயமும் கொஞ்சம் கொஞ்சமாக குறையும். பேய்க் கதைகள் நம் நாட்டில் மட்டும் அல்ல. உலகம் முழுவதிலுமே பலராலும் விரும்பிப் படிக்கக் கூடிய கதைகளாகத்தான் இருக்கின்றன. அவ்வளவு ஏன் சினிமா படங்கள் கூட வருகின்றன! ஆகவே பேய்க் கதை படிப்பது ஒன்றும் தப்பே இல்லை!

- பி. சுசீலா
உடுமலைப்பேட்டை


விவேக் பதிலில் வேகமும் இருக்கிறது. உத்வேகமும் இருக்கிறது. 'பேய்க்கதை'களை சிறு வயதிலேயே படிப்பதால் நடுக்கம் குறைந்து போகும். 'வேப்ப மர உச்சியில் நின்று பேயொன்று ஆடுதுன்னு விளையாடப் போகும் போது சொல்லி வைப்பாங்க' என்ற எம்.ஜி.ஆர் படப்பாடலை நினைவு கூர்ந்தால் பேய்க் கதைகள் படிப்பதை ஆமோதிக்கவே தோன்றும்.

கண்ணுக்குத் தெரியாத சூட்சுமமான ஒன்றைப் பற்றிய கதை என்பதால் நிச்சயம் மன தைரியம், கற்பனை வளம் கூடுதலாகவே மிளிரும். அதனைப் படிக்கப் படிக்க அதிலும் ஐந்திலேயே படிக்கப் படிக்க ஐம்பதுக்குள் மிகப் பெரும் கற்பனைச் சித்தராக ஒளிரும் வாய்ப்பும் வரும்!

- ஆர்.ஜி.காயத்ரி,
நெல்லை




ஹியாச்சி பிசாசும் புத்திசாலி லியாங்கும்




இப்போதிலிருந்து நீ என் அடிமை.
என்னை ஒன்றும் செய்யாதே. என் தம்பி தனியாக வீட்டில் இருப்பான்.
முடியாது. நான் உன்னை விட முடியாது.
சியாங் வேகமாக ஓடினான்.
ஏய்... நில்லு...
ஹியாச்சி மந்திரக் கல் ஒன்றைத் தூக்கி எறிந்தாள்.
எப்படி போறன்னு பார்க்கலாம்?
கல் பட்டதும் சியாங் சிலையாக மாறினான்.
இதுதான் உனக்குப் பாடம்.
நாட்கள் சென்றன. சியாங்கின் தம்பி லியாங் அண்ணனை நினைத்து கவலை யடைந்தான்.
அண்ணனைத் தேடிச் செல்லலாம்.


லியாங் ஹியாச்சியின் அரண்மனையை அடைந்தான்.
அப்பொழுது ஹியாச்சி மந்திர செருப்புகளை அணிந்தபடி பறந்தாள்.
இது பிசாசின் கோட்டையாயிற்றே. அண்ணன் இங்கி ருப்பானா?
ஓ! இந்தச் செருப்புகளின் உதவி யால்தான் அவள் பறக்கிறாள்.
அவள் திரும்பி வருவதற்குள் அண் ணனைத் தேட வேண்டும்.
அரண்மனைக்குள் -
ஆ.... அண்ணா!
அவள் அண்ணனை சிலையாக மாற்றி விட்டாள். அவளுக் குப் பாடம் புகட் டறேன்.


லியாங் அம்புடன் காத்திருந்தான்.
அதோ வருகிறாள்.
அடுத்த நொடி லியாங்கின் அம்பு ஹியாச்சியின் செருப்பில் பாய்ந்தது.
செருப்புகள் கீழே விழுந்தன.
உதவி...
ஹியாச்சியின் கதை முடிந்தது.
ஹியாச்சி இறந்ததும் சியாங் பழைய உருவத்தை அடைந்தான்.
அண்ணா!
லியாங், இங்கே நிறைய தங்கக் கட்டிகள் உள்ளன. எடுத்துக் கொள்வோம்.
© JINGLE BELL CREATIONS
தங்கத்துடன் இருவரும் வீட்டிற்குச் சென்றனர்.

குறும்பு கொஞ்சம் அதிகம்!



சொன்னா நம்புங்க.
ப்ரிட்ஜில இருந்த
ஐஸ்கிரீமை நான்
சாப்பிடவே இல்ல!

- ஷிவ்

என்ன ஊருப்பா இது!
தண்ணிக் கஷ்டம் தாங்க
முடியல!



ஹே... மேன்... மேனர்ஸ்
இல்ல... தூங்கிறப்ப வந்து
டிஸ்டர்ப் பண்ணுற!





எக்ஸிபிஷன்
கூட்டிட்டுப்
போறதா
சொல்லிட்டு,
இப்படி ஒரு டப்பா
காரை ஏற்பாடு
செஞ்சிருக்காங்க...
ச்சே!

ஹலோ,
இந்தியா சார்பா
என்னை
அனுப்பிப்பாருங்க.
நான் ஒலிம்பிக்ல
மெடல் வாங்கிக்
காட்றேன்.



• தாளாளர்



• தலைமை ஆசிரியர்



பொள்ளாச்சி மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மகாலிங்கபுரம் ஸ்பெஷல்



சிறந்த பள்ளி!

பளிங்குப் பிள்ளையார் கோயிலுடன் ஓங்கி உயர்ந்த கட்டடங்களுடன் நிமிர்ந்து நிற்கிறது மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி. அழகம்மை ஆச்சி உயர் நிலைப் பள்ளி என்ற பெயருடன் 1978ஆம் ஆண்டில் மெய்யப்பா கல்வி நிறுவனத்தினரால் 200 மாணவியருடன் துவக்கப் பட்டது இப்பள்ளி. 2000ஆம் ஆண்டு என்.ஐ.ஏ. கல்வி நிறுவனத்தின் தலைவர் ந.மகாலிங்கம் அவர்களால் மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது. இன்று 1300 மாணவியர், 42 ஆசிரியைகளுடன் செயல்பட்டு வருகிறது. செயலர் சி. ராமசாமி, தாளாளர் ஆர். கிருஷ்ணசாமி அவர்களின் கடும் உழைப்பால் பொள்ளாச்சியில் மிகச் சிறந்த பள்ளியாக விளங்குகிறது.

கூட்டுச் செயல்பாடையும் பள்ளி சுகாதாரத்தையும் உறுதியாக கடைபிடித்து வருகிறார் தலைமையாசிரியர் எல். சுசீலா.

பாட்டு, கை வேலை, கோலம், நாடகம், நாட்டியம் போன்றவை கற்றுத் தரப்படுகின்றன. சாரணியர், செஞ்சிலுவைச் சங்கங்களும் உண்டு. விளையாட்டிலும் இப்பள்ளி மாணவியர் சிறந்து விளங்குகின்றனர்.

2004 - 2005 கல்வியாண்டின் ஆளுநரின் ராஜ்ய பிரஷ்கார் விருதை இப்பள்ளி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

"இன்றைய சமூகத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் பெண் கல்வியினாலேயே ஏற்பட முடியும். இந்தியாவின் உயர்ந்த பண்பைச் சரியாகச் சித்தரிக்க எவராலாவது முடியுமென்றால் அது இந்தியப் பெண்களால் தான் முடியும்" என்றார் நேரு.




- ஒன்பதாம் வகுப்பு 'உ' பிரிவு மாணவியர்

சிந்தனைக்கு...

இதயம் ரோஜாவாக இருக்கும் போது தான் வார்த்தைகள் மணமிகுந்த இதழ்களாக வெளிவரும்.

- எம். சிஸல்பா குயின் ஷியாமினா,
பன்னிரண்டாம் வகுப்பு





ஹப்பில் தொலைநோக்கி

இந்தத் தொலைநோக்கி ஏப்ரல் 1990ல் பூமிக்கு வெளியே சுமார் 360 மைல் தொலைவில் சுற்றி வரும்படி அமைக்கப்பட்டது. 1995ல் இந்தத் தொலைநோக்கி அனுப்பிய புகைப்படங்களிலிருந்து, அண்டத்தில் சுமார் 50 பில்லியன் கேலக்ஸிகள் (நட்சத்திரக் கூட்டம்) உள்ளன என்பது நமக்குத் தெரிய வந்தது.

- எட்டாம் வகுப்பு 'டி' பிரிவு
மாணவியர்,

விமான நிலையம்

கான்சாய் சர்வதேச விமான நிலையமானது வியாபாரத்திற்காக செப்டெம்பர் 4, 1994ல் ஜப்பானில் நிறுவப்பட்டது. விண்வெளியில் இருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய கட்டட அமைப்புகள் உலகில் இரண்டு மட்டுமே. அவை சீனப் பெருஞ்சுவர் மற்றும் கான்சாய் சர்வதேச விமான நிலையம். இது ஜப்பானின் முதல் 24 மணி நேர சர்வதேச விமான நிலையம். இதற்காக மூன்று மலைகள் சம மட்டமாக்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் இங்கு வந்து செல்லும் விமானங்களின் எண்ணிக்கை 1,60,000.

- ஒன்பதாம் வகுப்பு
'டி' பிரிவு மாணவியர்

பொது அறிவு

1. வேர்இல்லாத தாவரம் எது?
   இலுப்பை
2. பிரான்ஸ் நாட்டின் தேசியப் பூ எது?
   அல்லி
3. குண்டுசி தலையளவுள்ள தாவரம் எது?
   உல்பியா தாவரம்

- எஸ். ஷாலினி
ஒன்பதாம் வகுப்பு

ஏன்... ஏன்?

1. எருக்கு பழுப்பதேன்?
   எருமைக்கன்று சாவதேன்?
2. ஆல் இலை பழுப்பதேன்?
   பூக்கள் உதிர்வதேன்?

- எம். மகாலஷ்மி
ஒன்பதாம் வகுப்பு

விடை:
1. பால் வற்றினால் 2. பறிப்பாற்று

விடுகதைகள்

கல்லரசி சோறாக்கி



கை அறுத்து குழம்பு வைத்து
ரை பறிக்க போற பெண்ணே
லை வந்தா என்ன செய்வே?
ரை மேலே ஏறிக்குவேன்.

- எஸ். பிருந்தா
ஒன்பதாம் வகுப்பு

விடை:
அ. புழுங்கல் அரிசி ஆ. முருங்கை
இ. தாமரை ஈ. முதலை உ. கரை

1. ஒற்றைக்கால் ராணி நாட்டியம் ஆடுகிறாள் - அவள் யார்?
2. வெள்ளைக் கூட்டுக்குள்ளே மஞ்சள் ஆறு - அது என்ன?

- மு. அமுதா
எட்டாம் வகுப்பு


விடை: 1. பம்பரம் 2. முட்டை




பொள்ளாச்சி மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மகாலிங்கபுரம் ஸ்பெஷல்

விடுபட்ட எண்களைக் காண்க:

I



II



- இ.ஆர்த்தி, பத்தாம் வகுப்பு

விடைகள்:

I. விடுபட்ட எண்: 25

2,3,4,5 ஆகிய எண்களுக்கு எதிரே உள்ளவை அவற்றின் வர்க்க எண்களாகும்.


II. விடுபட்ட எண்: 8

1,2,3, உடன் 5ஐக் கூட்டினால் வருவது அவற்றிற்கெதிரே உள்ள எண்கள் ஆகும்.


1 முதல் 12 வரையிலுள்ள எண்களில் 4 எண்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு வரிசையிலும் கூட்டுத் தொகை 26 வரும்படி செய்யவும்.


எ.கா: 2+9+3+12=26

- ஜெயந்தி ஜமுனா, எட்டாம் வகுப்பு




விடை:





பொள்ளாச்சி மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மகாலிங்கபுரம் ஸ்பெஷல்



* ஜி. வித்யா, பன்னிரண்டாம் வகுப்பு

* டி. பாமா ருக்மணி, பன்னிரண்டாம் வகுப்பு



* எஸ். பிரியதர்ஷினி ஒன்பதாம் வகுப்பு

* ஆர். நர்மதா, பன்னிரண்டாம் வகுப்பு



* எம். மதனிகா பதினோராம் வகுப்பு






* டி. மோனிஷா எட்டாம் வகுப்பு

* பி. ரேவதி பன்னிரண்டாம் வகுப்பு






* எஸ். அக்ஷயா பத்தாம் வகுப்பு




* ய. பர்சனா பதினோராம் வகுப்பு



* ஜி. அனிதா பன்னிரண்டாம் வகுப்பு





கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

- புதிதாக சந்தா செலுத்தலாம் ☐
- ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐
- உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

நண்பரின் பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஸர்க்குலேஷன் மானேஜர்,
கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097

வால் மேல்

நினைவில் நின்றவை...



மாமா வந்தார்!


எங்கள் மாமா ஊரிலிருந்து வந்திருந்தார். அந்த நேரம் அப்பா வெளியில் சென்றிருந்தார். நானும் என் அண்ணனும் எங்கள் அப்பாவுக்கு சர்ப்ரைஸ் கொடுக்க முடிவு செய்தோம். அதனால் அப்பா பெல் அடித்ததும் மாமாவை ரூமுக்குள் ஒளித்து விட்டுக் கதவைத் திறந்தோம். நான் ஆர்வ மிகுதியால் ''அப்பா, மாமா யாரும் வீட்டுக்கு வரவில்லை'' என்றேன். உடனே அனைவரும் சிரித்தனர். அண்ணன் மட்டும் முறைத்தான்.

- இரா. சுபத்ரா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீவித்யா மந்திர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சேலம்

வேதனை

எங்கள் தெருவில் ஒருவர் தன் மகனைப் பக்கத்து வீட்டுப் பையன் நகத்தால் கீறி காயப்படுத்தியதற்காக பயங்கரமாக சண்டை போட்டார். அடுத்த நாள் காலை அவருடைய சேவலையும் இன்னொருவரின் சேவலையும் வைத்து மோத விட்டு ரசித்த காட்சி என்னைப் பதற வைத்தது. இரண்டு சேவல்களுக்கும் காயம் பட்டு ரத்தம் வந்தது. அவற்றின்மீது தண்ணீர் தெளித்து சண்டையைத் தூண்டி விட்டனர். தன் மகன் காயப்பட்டதற்காக கத்தியவர் சேவல்களைப் பார்த்து இப்படி ரசிக்கிறாரே என மிகவும் வருத்தமாக இருந்தது எனக்கு.

- வீ. கலாதேவி, இடைப்பாடி



சன் ஃபிளவர்

என் அக்கா ஷோபியாவும் அவளின் தோழி நிர்மலாவும் முதல்வன் படத்தில் வரும் ஒரு பாடலுக்கு நடனமாடினார்கள். மேடையில் இரண்டு பெரிய சூரிய காந்திப் பூக்களை அட்டையில் உருவாக்கி பெரிய குச்சியில் ஒட்டி என்னையும் என் அண்ணனையும் பிடித்துக் கொண்டு மெதுவாக ஓடி வரச் சொன்னார் என் அம்மா. நாங்கள் அப்படியே ஓடி வந்தோம். பூவின் நடுவே துளைகள் உண்டு. அது எங்கள் முகத்துக்கு நேராக இருக்கும். எங்கள் பார்வை தெரியும்படி. நான் ஆடிக் கொண்டே வரும் பொழுது மேடையின் முதல் வரிசையில், என் தோழன் சுரேஷ் அமர்ந்திருந்தான். அவன் ''ஹையா! சன் ஃபிளவர்'' என்றான். நான் உடனே ''நான்


வால்!

தாண்டா டேனியல்'' என்று கூறி பூவை விலக்கி என் முகத்தைக் காட்டினேன். ஆடியன்ஸ் என் செயலால் சிரிப்பதைப் பெருமையாக நினைத்து நான் மீண்டும் அவ்வாறே செய்ய, ஆடிக் கொண்டே வந்த என் அக்கா என்னைக் கிள்ளி நகர்ந்தாள்.

- எஸ்.டேனியல் லியோ பிரபு,
மதுரை

பழைய பழமொழி

எட்டாம் வகுப்பில் தமிழாசிரியர் பழமொழி நடத்திக் கொண்டிருந்தார். பழமொழி 2000 வருடங்களுக்கு முன்பு



எழுதப்பட்ட 'பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று' என்று பழமொழியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். நண்பன் ஒருவனின் தமிழ்ப் புத்தகத்தில் பழமொழி பக்கம் 'செல்' அரித்து இருந்ததைத் தற்செயலாகப் பார்த்த அவர் அவனை எழுப்பி ''ஏண்டா புத்தகம் இப்படி செல் அரிச்சிருக்கு?'' எனக் கேட்டார். ''நீங்கதானே சார்.. சொன்னீங்க பழமொழி 2000 வருஷத்துக்கு முன்னால எழுதப்பட்டதுன்னு... அதான்!'' என்றான் சாமர்த்தியமாக. ஆசிரியர் அவனைக் கண்டிக்க, ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டான். இதை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

- ப. காளிதாசன், நீர்விளங்குளம்



இரட்டை வால்

எங்கள் சந்துரு படுசுட்டி. அவன் செய்யும் சேட்டைகளுக்கு அளவே கிடையாது. அதனால் அவனது பாட்டி அவனை எப்போதும் 'டேய் வால்' என்றுதான் கூப்பிடுவார். ஒருமுறை வீட்டு காம்பவுண்டு சுவர்மீது ஏறி ஆட ஆரம்பித்துவிட்டான். ''டேய்! கீழே விழுந்துறாதடா'' எனப் பதறிக் கொண்டே பாட்டி ஓடி வந்தார். ''பாட்டி! பார்த்தியா? Wall (சுவர்) மேல இன்னொரு வால்'' எனப் பழிப்புக் காட்டியபடி அவன் சொன்னதும் பாட்டி உட்பட எல்லோரும் சிரித்துவிட்டோம்.

- வி. கல்யாணி, திருநெல்வேலி





பசியெடுக்கும்

குப்புசாமி பணக்காரர். அவருக்குச் சொந்தமான வயலில் நடவுக்குத் தயார் செய்யும் பணி நடந்து கொண்டிருந்தது.

குப்புசாமி காலையிலேயே வேலை நடைபெறும் இடத்திற்குச் சென்றார்.

அவரது வேலை ஆள் வேலு, மண் வெட்டியினால் நடவு வயலில் உள்ள மேடு, பள்ளங்களைச் சமப் படுத்திக் கொண்டிருந்தான்.

வேலை செய்வதைப் பார்த்தவாறு அங்கிருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்தார், குப்புசாமி.

காலை உணவு வேளை -

மண்வெட்டியை வயலில் வைத்துவிட்டு கை, கால்களைக் கழுவி விட்டு வந்தான். மனைவி கொண்டு வந்து வைத்திருந்த சாப்பாட்டு வாளியைத் திறந்து, சாப்பிட உட்கார்ந்தான் வேலு.

குப்புசாமியும் வீட்டிலிருந்து வந்ததைச் சாப்பிட அமர்ந்தார்.

இட்லியும், தொட்டுக்கொள்ள சாம்பார், சட்னி, எண்ணெயில் தோய்த்த பொடி ஆகியனவும் இருந்தன.

அத்தனை இருந்தும் அவரால் இரண்டு இட்லிக்கு மேல் சாப்பிட முடியவில்லை. எழுந்து கை கழுவி விட்டு, வேலுவைப் பார்த்தார் குப்புசாமி.

வேலுவின் கை அள்ள அள்ள சோறு, வாய்க்குள் போய்க் கொண்டே இருந்தது.

அப்படி சுவையான உணவு என்ன? என்பதை அறிந்திட விரும்பிய குப்புசாமி, "வேலு! உனக்கு வந்த காலைச் சாப்பாடு என்ன?" என்று கேட்டார்.

"பழைய சோறும் வெங்காயமும்..." என்றான் வேலு.

'இட்லியாக இருந்ததால்தான் என்னால் சாப்பிட முடியவில்லை போலிருக்கிறது...' என்று நினைத்த குப்புசாமி, தனக்கு மறுநாள் காலை உணவை பழைய சோறும் வெங்காயமுமாக அனுப்பும்படி வீட்டில் சொல்லி வைத்தார்.

மறுநாள் -

காலை உணவு நேரத்திற்கு வழக்கம்போல் சாப்பிட அமர்ந்தான் வேலு.

முதல் நாள் போலவே பழைய சோறும் தொட்டுக் கொள்ள வெங்காயமுமாக வேலு அள்ளி அள்ளி சாப்பிடத் தொடங்கினான்.

குப்புசாமி வீட்டில் சொல்லியிருந்தபடி அவருக்கும் பழைய சோறும் வெங்காயமும்.

'இன்று வேலுவைப் போல் சாப்பிடலாம்' என்று எண்ணி, சோற்றைக் கையால் அள்ளி வாயில் வைத்தார், குப்புசாமி.

ஊகூம். சாப்பாடு உள்ளே போகவில்லை. குமட்டிக் கொண்டு வந்தது.

வாயில் வைத்த சோற்றைத் துப்பிவிட்டு, வாளியை மூடி வைத்து விட்டு எழுந்தார் குப்புசாமி.

அதைப் பார்த்த வேலு, "ஐயாவுக்கு எப்போதும் இட்லி தான் வரும். இன்று பழையது வந்திருப்பதால் சாப்பாடு செல்லவில்லை..." என்றான்.

அதற்கு குப்புசாமி, "நான்தான் பழைய சோறு கொண்டு வரச் சொன்னேன்.." என்றார்.

"ஏன்?" என்று கேட்டான், வேலு.

"எனக்கு சில நாட்களாக பசி எடுப்பதில்லை. மருத்துவர் கொடுத்த மருந்துகளைச்



சாப்பிட்டும் பயனில்லை. நேற்று, நீ பழைய சோறும் வெங்காயமும் கொஞ்சமும் மீதி வைக்காமல் சாப்பிட்டு முடித்ததைப் பார்த்

மருந்து!

புலேந்திரன்

தேன். அம்மாதிரி இருந்தால் எனக்கும் உணவு செல்லும் என்று நினைத்து, கொண்டு வரச் சொன்னேன். ஆனால்... அது அறவே செல்லவில்லை...'' என்றார் குப்புசாமி.

''நாளை ஒரு நாள்... நான் சொல்கிறபடி செய்கிறீர்களா?...'' கேட்டான் வேலு.

''சரி...'' என்றார் குப்புசாமி.

அடுத்த நாள் -

வழக்கம் போல் வயலுக்குச் சென்றார், குப்புசாமி.

வேலு, ஒரு மண்வெட்டியுடன் நின்றான்.

வயலில் - கூடுதலாக ஒரு மண் வெட்டி இருந்தது-

''நான் வேறு ஆள் அழைத்து வரச் சொல்லவில்லையே, அந்த மண்வெட்டி யாருக்கு?'' கேட்டார் குப்புசாமி.

''உங்களுக்குத்தான்..'' என்ற வேலு, ''இன்று வரப்பு போடும் வேலை. நான் கிழக்கு வரப்பைப் போடுகிறேன். நீங்கள் மேற்கு வரப்பைப் போடுங்கள்'' என்றான்.

குப்புசாமி, மண்வெட்டியினால் வெட்டி வரப்பு போடத் தொடங்கினார்.

இரண்டு வரப்புகளும் போட்டு முடித்ததும், காலை உணவுக்காக இருவரும் உட்கார்ந்தனர்.

சாப்பிட்டு விட்டு, கை கழுவினார் குப்புசாமி.

வேலு சாப்பிட்டு முடிக்கவில்லை.

''ஐயா... அதற்குள்ளாகவா சாப்பிட்டு விட்டீர்கள்...?'' கேட்டான் வேலு.

''ஆமாம், இதோ பார்...'' வாளியைக் காண்பித்தார். ஒரு பருக்கை கூட மீதம் இல்லை.

''அப்படியானால்...?''

என்ற வேலுவைப் பார்த்து -

''பசி.. அபாரப் பசி! பசியின் அருமை உழைப்பில் இருக்கிறது என்பதை எனக்கு உணர வைத்த உனக்கு நன்றி'' - என்று உள்ளம் மகிழ்ந்து கூறினார், குப்புசாமி.



சின்னப் பாத்தியில் சிங்கார நாற்றுகள்!



விடுகதைப் பக்கம்

I. 1. சின்னப் பாத்தி முழுவதும் சிங்கார நாற்றுகள் - அது என்ன?

2. உடம்பைச் சுற்றும் பாம்பு ஒரு போதும் கடிக்காது - அது என்ன?

3. கையிலிருந்து விழுவான். கணக்கு சொல்லித் தருவான் - அவன் யார்?

4. காற்றில் காணாமல் போகும் வெள்ளை மாத்திரை - அது என்ன?

- எஸ். கவிதா,
திருநெல்வேலி

II. 1. பத்து விரல் பந்தாட, ஐந்து விரல் அமர்ந்திருக்க, சூரியனுடன் வாதாட, எமனுடன் போராட - அது என்ன?

2. கழுத்துண்டு கையில்லை; தொப்பி யுண்டு தலைமுடியில்லை - அவன் யார்?

3. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது - அது என்ன?

4. ஊதினால் பறக்கும் அதன் மதிப்பை உலகமே மதிக்கும் - அது என்ன?

- மு. வெங்கடேசன், பத்தாம் வகுப்பு, சிறிய மலர் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்

III. 1. எரிந்தால் சிவப்பு, அணைந்தால் கறுப்பு - அது என்ன?

2. உருவமில்லை உயிருமில்லை, என் வேகத்திற்கு இணை எவரும் இல்லை - அது என்ன?

3. கரித்துண்டு நான், கடினத்திற்கு நான், காண்போரைக் கவரும் - நான் யார்?

4. என்னை வெடிக்கச் செய்தால் மூன்று பிள்ளை பிறப்பர். ஒன்று கண்ணுக்குத் தெரியும். இருவர் கண்ணுக்குத் தெரிய மாட்டார் - நான் யார்? பிள்ளைகள் யார்?

- வி.பி. மதிமலர், ஒன்பதாம் வகுப்பு, பிஷப்ரோச் மேல்நிலைப் பள்ளி, இடிந்தகரை

IV. 1. அழகழகாய்ப் பூக்கும். அம்மாடி என்று காய்காய்க்கும் - அது என்ன?

2. இரண்டு பெண்கள் இரட்டைப் பிறவிகள், ஒருத்தி கீழே வந்தால் ஒருத்தி மேலே போவாள் - அவர்கள் யார்?


3. உச்சிக்கிளையில் ஒரு முழக்குச்சி ஊசலாடுது - அதுஎன்ன?

4. ஊரெங்கும் நிறைந்திருப்பான், உலகெங்கும் நிறைந்திருப்பான் என்றாலும் அவனைப் பார்க்க ஒருவராலும் இயலாது - அவன் யார்?

- விசாகன்,
இராஜபாளையம்

விடைகள் :

I. 1. டூத் ப்ரஷ் 2. பெல்ட் 3. பகடை 4. கற்பூரம்
II. 1. வறட்டி 2. பேனா 3. எறும்பு 4. ரூபாய் நோட்டு
III. 1. கரித்துண்டு 2. ஒளி 3. வைரம் 4. வெடி - ஒளி, வெப்பம், ஒலி (ஓசை)
IV. 1. நெருஞ்சி 2. தராசுத் தட்டுகள் 3. முருங்கைக்காய் 4. காற்று



ஓணான் வெளிவர எவ்வளவு நேரமாகும்?

புதிர் உலகம்

I. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இரண்டு முருங்கை மரங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒரே ஒரு காய் காய்த்தது. அதில் ஒன்று மற்றொன்றை விட இரண்டு மடங்கு பெரியது. அம்மா சமையலுக்காக ஒவ்வொரு முருங்கைக்காயிலிருந்தும் 4 அங்குலம் வெட்டிக் கொண்டார். அதன் பிறகு பார்த்தால் ஒன்று மற்றதைவிட மூன்று மடங்கு பெரிதாக இருந்தது. அப்படியெனில் அக்காய்கள் காய்த்தபோது எத்தனை அங்குலங்கள் இருந்திருக்கும்?

- எம். வினோத், சங்கரன்கோவில்

II. ஓர் ஓணான் இருபது மீட்டர் ஆழக்குழியில் தவறி விழுந்துவிட்டது. மேலே வர முயன்ற ஓணான் ஒரு மணி நேரத்தில் இரண்டு மீட்டர் தூரம் ஏறி விடும். சிறிது ஓய்வு எடுக்கும் வேளையில் தடுமாற்றத்தில் ஒரு மீட்டர் சறுக்கி கீழே இறங்கி விடும். பிறகும் அதேபோல் ஒரு மணி நேரத்தில் இரண்டு மீட்டர் ஏறும். தடுமாற்றத்தில் ஒரு மீட்டர் இறங்கிவிடும். இப்படியே ஓணான் மணிக்கு இரண்டு மீட்டர் ஏறி ஒரு மீட்டர் இறங்கினால் எத்தனை மணி நேரத்தில் அதனால் குழியிலிருந்து வெளியே வர முடியும்?

- ஏ.ஜி. முகம்மது தௌபீக், மேலப்பாளையம்

III. ஒரு மனிதன் 260 மைல் தூரத்தை 5 மணி நேரத்தில் காரில் கடக்க வேண்டும். முதல் இரண்டு மணி நேரத்தில் சராசரியாக மணிக்கு 40 மைல் வேகத்தில் சென்றால், மற்ற மூன்று மணி நேரத்தில் அவன் மணிக்கு என்ன வேகத்தில் செல்ல வேண்டும்?

- என். ஜரினாபானு, திருப்பட்டினம்

IV. கீழ்கண்ட 6 கேள்விகளுக்கும் பதில்கள் 3, 4, 5, 6, 7 என்ற எழுத்துகளில் அமைந்திருக்கும். 'ன்' என்ற எழுத்தில் முடிவடையும். எங்கே விடைகளைக் காணுங்கள் பார்க்கலாம்!

1. பச்சையம் இல்லாத தாவரம் எது?
2. திருக்குறள் முதன்முதலாக மொழி பெயர்க்கப்பட்ட அயல்நாட்டு மொழி எது?
3. முதல் இஸ்லாமியக் குடியரசு நாடு எது?
4. 'குடும்ப விளக்கு' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
5. பதவியில் உள்ளபோது 'நோபல் பரிசு' பெற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களுள் ஒருவர் ———

- கி. சிந்து, மயிலாடுதுறை



V. தன் நண்பனின் வீட்டிற்கு முதன்முதலாக நுழைந்த ஒருவர் அங்கு மாட்டியிருந்த புகைப்படம் ஒன்றைக் காட்டி "இது யாருடைய படம்?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "எனக்கு அண்ணனும் கிடையாது. தம்பியும் கிடையாது. அக்காவும் கிடையாது. தங்கையும் கிடையாது. நான் இரட்டைக் குழந்தைகளுள் ஒருவனாகவும் பிறக்கவில்லை. ஆனால் இந்தப் படத்தில் உள்ளவனின் தந்தை, என் தந்தைக்கு மகன் ஆகிறான்" என்று விளக்கம் தந்தார்.

அப்படியானால் அந்தப் படத்தில் உள்ளவர் யார்?

- ம. சந்தோஷ், நான்காம் வகுப்பு, சிவகாசி அரிமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி



VI. ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்கி, அத்தொகையுடன் அதே எண்ணைக் கூட்டி, வரும் தொகையை 4-ஆல் வகுத்தால் வருவது அதே எண். அந்த எண் எது?

VII. வரிசையாக வரும் மூன்று எண்களைப் பெருக்கி வரும் தொகையும் வரிசையாக வரும் வேறு நான்கு எண்களைப் பெருக்கி வரும் தொகையும் ஒன்றாக இருக்க வேண்டும்.

- பா. ஈஸ்வரி, பத்தாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை மையம், பரமக்குடி

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 வி	■	2 மு	■	3 வி	■	4 சி	தி	ரை
5 ஜ	வா	ஹ	ர்	லா	ல்	நே	ரு	■
ய	■	ம	■	ச	■	6 கி	சு	7 வா
ம்	8 லா	9 து	■	ம்	10 சு	11 தா	■	ல்
■	ரி	■	12 ப	■	தை	■	13 வ	■
14 ச	■	ம்	லா	15 சு	■	16 இ	ட	17 து
னை	ம்	18 ர	■	த்	■	ந்	■	ரு
■	19 சு	த	ந்	தி	ர	தி	ன	ம்
லை	20 ப	21 அ	■	ரி	■	ரா	■	பு

விடைகள் :

I. 16 அங்குலம், 8 அங்குலம்

8 x 2 = 16

16 - 4 = 12; 8 - 4 = 4

4 x 3 = 12

II. ஓணான் ஒரு மணி நேரத்தில் இரண்டு மீட்டர் ஏறி ஒரு மீட்டர் கீழே இறங்கிவிடுவதால் ஒரு மணி நேரத்தில் ஒரு மீட்டர் தூரமே ஏற முடியும். பதினெட்டு மணி நேரத்தில் பதினெட்டு மீட்டர் தூரம் ஏறிவிடும். பத்தொன்பதாவது மணி நேரத்தில் மேலே ஏறி விடுவதால் மீண்டும் சறுக்க வாய்ப்பில்லை. குழியிலிருந்து ஓணான் வெளியே வர பத்தொன்பது மணி நேரமாகும்.

III. 60 மைல் வேகம்

IV. 1. காளான் 2. லத்தீன்
3. பாகிஸ்தான் 4. பாரதிதாசன்
5. உட்ரோவில்சன்

V. நண்பரின் விளக்கத்தால் அவர் தன் தந்தைக்கு ஒரே மகன் என்றாகிறது. ஆகவே அந்தப் படத்தில் உள்ளவன் அவரின் மகன்.

VI. 3

VII. 4 x 5 x 6 = 120
2 x 3 x 4 x 5 = 120



பாய்மரப் படகு வீரன்!

வாகை சூட வயது தடையில்லை

கடற்கரை துறைமுகப் பகுதியிலிருந்து கிளம்பிய அந்தப் பாய்மரப் படகு கடலுக்குள் விரைந்து கொண்டிருந்தது. காற்று சாதகமாக இருக்கவே படகை ஓட்டிக் கொண்டிருந்த முன்னா ஜமாலுக்கு ஒரு பிரச்னையுமில்லை. ஆனால் ஆறு வயது சிறுவன் அபிமன்யு நித்யானந்துக்கு ஒரே பிரமிப்பு. துறைமுகப் பகுதியில் நின்றிருந்த பிரம்மாண்ட கப்பல்கள் கூட பார்வைக்குச் சிறியதாகப் போய்விட்டன. இதற்கிடையில் குறுக்கும் நெடுக்குமாக மீன்பிடி படகுகள் பயமுறுத்திக் கொண்டிருந்தன. அலைகளின் ஆர்ப்பரிப்பு இல்லாத கடல்.

''அங்கு பெரிய கப்பல் ஒண்ணு வருதே! நம்ம மேல இடிச்சுறப் போகுது'' என்று அபிமன்யு சொல்ல, 'அதெல்லாம் ஒண்ணும் ஆகாது' என்ற முன்னா ஜமால் படகின் விளிம்பில் உட்கார்ந்திருந்த அபிமன்யுவை திடீரென்று கடலில் தள்ளிவிட்டார். தண்ணீர் சிதறியடிக்க ஒரு முங்கு முங்கி வெளியே வந்தான் அபிமன்யு. ''அங்கிள்...அங்கிள்....'' என்று அலறினான்.

''ஐயோ... அப்புறம் என்ன ஆச்சு?''

''ஒண்ணும் ஆகலை'' என்று சிரித்தார் நம் முன்னே அமர்ந்திருந்த அபிமன்யு. இப்போது ஜெ.கிருஷ்ணமூர்த்தி ஃபவுண்டேஷன் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறார்.

''நான் மூன்று வயதிலிருந்தே நீச்சல் கற்றுக் கொண்டவன். கடல், கப்பல் என்றால் எனக்குப் பெரிய பிரமிப்பு; திகைப்பு; ஈர்ப்பு. தொலைக்காட்சிகளில் கடல் சம்பந்தப்பட்ட படங்கள், நீரில் ஆடப்படும் விளையாட்டுகள் நிறையப் பார்ப்பேன். அப்போது எனக்கு





மிகவும் பிடித்துப் போனது பாய் மரப் படகுப் போட்டிகள். பாய்மரப் படகு வீரனாக உருவாக வேண்டும் என்று அம்மா, அப்பா ஆகியோரிடம் சொன்ன போது, உடனே 'ஓகே' சொல்லி விட்டார்கள். துறைமுகத்தில் உள்ள படகு கிளப்பில் சேர்ந்து விட்டேன். அந்த கிளப்பின் முதல் வாண்டு உறுப்பினர் நான்தான். பாய்மரப் படகு ஓட்டக் கற்றுக் கொள்வது என்பது சாதாரண விஷயமல்ல; முதலில் கடலைப் பற்றிய பயம் போகனும். எனவே தான் பயிற்சியாளர் முன்னா முதன் முறையாக என்னைக் கூட்டிக் கொண்டு போகும் போது தடாலென்று கடலுக்குள் தள்ளி விட்டார். நீச்சல் தெரிந்ததால் எனக் கேதும் பிரச்னையில்லை. அதன் பிறகு தொடர்ந்து பயிற்சி தான். பயிற்சி மட்டுமல்ல; தியரி வகுப்புகளும் உண்டு. படகு காற்றை நம்பிப் போவதால் அதன் சூட்சுமங்களையும் திட்டமிடுதலையும் சொல்லித் தருகிறார்கள்.''

இலக்கை நோக்கி படகை ஓட்டும் போது, காற்று சாதகமில்லாத நிலையில் மிகவும் சங்கடமாகப் போய் விடுமாம். சில சமயம், கடலில் இலக்கு எங்கேயோ வைக்கப்பட்டு இருக்குமாம். ஆனால் காற்றின் போக்கினால் அதை நேரிடையாக அடைய முடியாதாம். எனவே காற்றோடு படகைக் கொண்டு போய் சுற்றியலைந்து இலக்கை அடைய நேரிடுமாம். வயதிற்கேற்றபடி போட்டிகள் உண்டு. அந்த அடிப்படையில் பயன்படுத்தப்படும் படகுகளின் அளவுகளும் மாறுகின்றன.

அபிமன்யு ஏழு வயதிலிருந்தே படகுப் போட்டிகளில் கலந்து கொள்கிறார். சென்னையைத் தவிர மும்பை, பூனா, ஹைதராபாத் ஆகிய இடங்களுக்கும் சென்று வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறார் அபிமன்யு. பன்னிரண்டு வயதுக்குள் இருப்பவர்களுக்கு நடந்த போட்டியில் 2000 வருடத்தின் இந்திய சாம்பியன் அபிமன்யு தான். இவரது திறமையை மேலும் வளர்க்கும் விதமாக மலேஷியாவுக்குப் பயிற்சிக்காக அனுப்பி வைத்தார்கள். இதைத் தவிர கோவாவிலும் பயிற்சி கொடுத்தார்கள். இந்த வருடம் ஜூலையில் நெதர்லாந்து நாட்டில் நடந்த 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் நமது நாட்டின் சார்பாக கலந்து கொண்டார் அபிமன்யு. ஆனால் பலத்த போட்டி இருந்ததால் பரிசு பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை.



இப்போதெல்லாம் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் 12 மணி நேரம், கடலில் அதுவும் கரையிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் பயிற்சி எடுக்கிறார் அபிமன்யு. அம்மா லதா யோகா பயிற்சியாளர். இதனால் உடம்பை ஃபிட்டாக வைத்துக் கொள்ள யோகா பயிற்சியும் செய்கிறார்.

''படகுப் போட்டியில் படகுகளின் மோதல் காரணமாகவும் காற்று பலமாக வீசும் நிலையிலும் சில சமயங்களில் அலைகளின் ஆர்ப்பரிப்பு காரணமாகவும் படகு கவிழ்வதற்கு வாய்ப்பு உண்டு. அந்த நிலையில் படகை நிமிர்த்தி, அதில் மீண்டும் அமர்ந்து போட்டியில் தொடர்ந்து பங்கு கொள்ள கடுமையான பயிற்சி தேவை'' என்கிறார்.

இந்தப் படகு விளையாட்டுக்கு நிறையப் பணம் செலவாகும். சொந்தமாக படகு வைத்திருக்க வேண்டும்.

''2008ம் வருடம் நடக்கவிருக்கும் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்து கொண்டு பதக்கம் பெற வேண்டும். அதை நோக்கியே என் பயணம்'' என்கிறார் உறுதியான குரலில் அபிமன்யு.

''படகு விளையாட்டையே தொழிலாக எடுத்துக் கொள்ள விருப்பமா?''

''எனக்குச் சுற்றுச் சூழல், மற்றும் பௌதிகம் படிக்க ஆசை. ஆனால் படகுப் போட்டிகளில் சாதனை புரிய வேண்டும் என்பது என் மூச்சோடு கலந்த ஒன்று.''

சாதிக்கும் வைராக்கியம் பளிச்சிடுகிறது.

- ப்ரியன்

படங்கள்: ராஜன்



புதையல்

பாலுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு வினாடி மூளை தன் சிந்திக்கும் ஆற்றலையே இழந்துவிட்டதோ என்று கருதும் விதத்தில் உறைந்து போய் விட்டது. பயத்தில் அவனுக்கு நெஞ்சு வறண்டு போனது. பேச்சு வரமறுத்தது. ஒரு வார்த்தை குரல் கொடுத்துத் தன் நண்பர்களை எழுப்ப நினைத்தான். ம்ஹூம். எது செய்யவும் அவனால் முடியவில்லை. காரணம் அவன் கண்ட காட்சி!

பத்தடி தூரத்தில் எமகாதகன் மாதிரி ஒரு மனிதன் அமைதியாக நின்று கொண்டு தங்களையே பார்த்துக் கொண்டிருப்பான் என்று அவன் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை. யாரைத் தேடி அவன் அந்தத் தீவுக்கு வந்திருந்தானோ, அவர்களுள் ஒருவன்! புதையல் எடுக்கிறேன் பேர்வழி என்று பேசிய கூட்டத்தில் ஒருத்தன். ஏதோ சட்ட விரோதமான காரியத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டிருக்கும் கும்பலைச் சேர்ந்தவன்! அவர்கள் எடுக்கும் புதையல் எது; எப்படி எடுக்கிறார்கள்; என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காகத்தானே அவனே அங்கே வந்திருக்கிறான்! ஆனால் இப்படி அவனிடமே மாட்டிக் கொள்ள நேர்ந்து விட்டதே என்று அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

‘டேய், டேய்’ என்று மெதுவாக டில்லிபாபுவைப் பார்த்துக் குரல் கொடுக்க முயற்சி செய்தான்.

‘‘இருடா. இன்னும் ரெண்டு நிமிஷம் ரெஸ்ட் எடுத்துப்போம். அப்புறம் ஃபுல் நைட் வேலை இருக்கில்ல?’’ என்றான் டில்லிபாபு.

‘‘டேய், பின்னால பாருடா’’ என்றான் குரலை அடக்கி, ரகசியமாக.

வேண்டாவெறுப்பாகத் தலையைத் தூக்கிப் பார்த்த டில்லியும் மின்சாரம் பாய்ந்தவன் போலச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றான். இருவரும் இப்படி எதைப் பார்த்து மிரள்கிறார்கள் என்ற யோசனையுடன் தானும் எழுந்த குடுமிநாதன், சிறிது தொலைவில் லுங்கியை மடித்துக் கட்டி, கால்களைச் சாய்த்து வைத்து நின்று தங்களையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்த மர்ம மனிதனைக் கண்டதும் ‘‘ஐயோ, அம்மா பயமா இருக்கே’’ என்று புலம்ப ஆரம்பித்துவிட்டான்.



அந்த மர்ம மனிதன் மெல்ல அடியெடுத்து வைத்து அவர்கள் மூவரையும் நெருங்கினான். அருகே வந்த சூட்டிலேயே டில்லிபாபுவின் தலைமுடியை ஒரு கையாலும் பாலுவின் காதை ஒரு கையாலும்

தீவு

பா.ராகவன்

இறுகப் பிடித்து "யார்றா நீங்க?" என்றான் கட்டைக் குரலில்.

ஒரு கணம் என்ன பேசுவது என்று தெரியாமல் மூவரும் தடுமாறிப் போனார்கள். ஏதாவது பொருத்தமாகக் கதைவிடலாம் என்று பாலுவுக்குத் தோன்றியது. ஆனால் மூவரும் ஒரே சமயத்தில் வேறு வேறு கதைகளாக விடத் தொடங்கினால் விபரீதமாகப் போய் விடுமே என்றும் கவலையாக இருந்தது. அவன் இவ்வாறு வேக வேகமாக யோசித்துக் கொண்டிருந்த போதே தன் 'கதாகாலட்சேபத்தை' குடுமிநாதன் ஆரம்பித்து விட்டான்!

"இல்லசார்.. நாங்க ஸ்கூல் பசங்க சார்... இன்னிக்கி ஸ்கவுட்ஸ் மாணவர்களை இங்க பிக்னிக்

7



மாதிரி சாயங்காலம் கூட்டிக் கிட்டு வந்தாங்க சார்... மொத்தம் பதினஞ்சு பாய்ஸ் வந்தோம் சார்... எல்லாரும் கரையிலேயே இருந்தாங்க. நாங்க மூணு பேர் மட்டும் தீவைச் சுத்திப் பார்க்கலாம்னு போனோம்... கால் வலி எடுத்து ஒரு இடத்துல படுத்தோம். அப்படியே தூங்கிட்டோம் சார். எழுந்து பார்த்தா இருட்டிடிச்சி. இங்க எங்க ஸ்கூல் பசங்களைத் தேடி வந்தோம். அவங்கல்லாம் போயிட்டாங்க போலருக்கு" என்று அழுவது போல நடிக்கத் தொடங்கினான் குடுமி.

"டேய், என்னடா கதை சொல்றீங்க? மூணு பசங்களை விட்டுட்டு எப்படிடா உங்க வாத்தியாருங்க போவாங்க?" என்றான் கோபமாக.

"தெரியலை சார்... அதான் எங்களுக்கும் கவலையா இருக்கு. இப்ப நாங்க எப்படி வீட்டுக்குப் போவோம்?" என்று பாலு தன் பங்குக்கு அழுவது போல நடிக்க ஆரம்பித்தான்.

இவர்களை என்ன செய்யலாம் என்று அவன் கொஞ்சநேரம் யோசித்தான். மூவரின் தோள்களையும் பிடித்துத் தள்ளிக் கொண்டு, "வாங்கடா என்னோட" என்று நடக்க ஆரம்பித்தான்.

இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என்று மனதுக்குள் வருந்தியபடி மூவரும் அவன் பின்னாலேயே நடக்க ஆரம்பித்தார்கள். நல்ல வேளையாக அவர்கள் வந்த கட்டுமரத்தை டில்லிபாபு அத்தனை சுலபமாகக் கண்ணில் பட்டுவிடாதபடி இழுத்துக் கொண்டு போய் ஏற்கெனவே ஒரு புதரின் பின்னால் ஒளித்து வைத்துவிட்டு, கட்டு மரத்தை இழுத்து வந்த மண்பாதையில் சுவடு தெரியாத வண்ணம் காலால் மண்ணை எத்தி எத்தி மூடியிருந்தான்.

அந்த மர்ம மனிதன் அவர்களைக் காட்டுக்கு உள்ளே அழைத்துப் போக ஆரம்பித்திருந்தான். பாலுவுக்கு இனி நடக்கப் போவது என்ன என்பது எளிதில் விளங்கிவிட்டது. எப்படியும் அவன் தங்களைத் தம் குழுவினர் முன் கொண்டு போய் நிறுத்துவான்.

காட்டுப்பாதை மிகவும் இருட்டாக இருந்தது. ஒரு பொட்டு வெளிச்சம் கூட இல்லை. எனினும் நன்கு பழகிய பாதை போல அந்த மர்ம மனிதன் அவர்களை வழி நடத்தி இழுத்துப் போய்க் கொண்டே இருந்தான்.

இருபது நிமிட நடைக்குப் பிறகு அவன் நினைத்தது போலவே அந்த மர்ம பங்களாவை அவர்கள் அடைந்தார்கள்.

"வாங்கடா" என்று மூவரின் தோள்களையும் ஒரே கையால் அணைத்து உள்ளே தள்ளிக் கொண்டு போனான் அந்த மர்ம மனிதன்.


சத்தம் கேட்டு பங்களாவுக்குள் சில மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு வேறு சிலர் உடைந்த சன்னல் வழியே எட்டிப்பார்த்தார்கள். தபதபவென்று வேறு சிலர் வெளியே வருவதையும் பாலு பார்த்தான். "யாரு யாரு?" என்று அவர்கள் கேட்கவும் அழைத்து வந்த மர்ம மனிதன், குடுமிநாதன் சொன்ன கதையை அவர்களிடம் சொன்னான்.

"உஸ்கோலு பசங்களாம். டூருக்கு வந்திருந்தாங்களாம். இவனுகளை மட்டும் விட்டுட்டுப் பூட்டாங்கன்னு சொல்றாம்பா. என்னால நம்ப முடியல" என்றான் அந்த மர்ம மனிதன்.

"ஆமாப்பா. போன வாரம் கூட இந்த மாதிரி ஒரு ஸ்கூல் பசங்க குரூப்பு இங்க

ஓவியப் போட்டி

டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் வர இருக்கிறது. இந்த மாத ஓவியப் போட்டியும் கிறிஸ்துமஸ் தொடர்பாக இருந்தால் நன்றாக இருக்கும்! கிறிஸ்துமஸ் தாத்தா என்று அழைக்கப்படும் சான்டாகிளாஸ் எல்லோரையும் கவர்ந்தவர். இந்த மாத ஓவியப் போட்டி: கிறிஸ்துமஸ் தாத்தா. படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.



கடைசித் தேதி: 5.11.2004

வந்திருந்ததுன்னு நம்ம மாணிக்கம் சொன்னான். கரையோரம் என்னவோ க்ளாஸ் எடுத்தாங்களாமா...'' என்றான் இன்னொருவன்.

''டேய், யார்டா நீங்க? உண்மையச் சொல்லுங்க?'' என்றான் வேறொருவன்.

''சார்... உண்மையிலேயே நாங்க ஸ்கூல் பசங்க தான் சார். எங்களோட மொத்தம் பதினஞ்சுபேரு வந்தாங்க. நாங்க வழி தவறிப்போய் தீவுக்கு அந்தப் பக்கம் போயிட்டோம் சார்'' என்றான் டில்லிபாபு.

''மணி என்னடா ஆவுது?'' என்றான் புதிதாக அங்கே வந்த இன்னொரு மர்ம மனிதன்.

''பதினொண்ணாவப் போவுது'' என்றான் அவர்களை அழைத்து வந்தவன்.

''இவனுகளை விசாரிச்சிட்டிருக்க இப்ப டயம் இல்லை. போட் வந்துடும். பேசாம இவங்களை ரூம்ல போட்டுப் பூட்டுங்க. நம்ம வேலை முடிச்சிட்டு, விடிஞ்சதும் விசாரிச்சிப்போம்'' என்றான் அவன்.

அவர்கள் மூவரையும் பிடித்து இழுத்துக் கொண்டு அந்த பங்களாவின் உள்ளே போனார்கள்.

மாடிப்படியேறி அழைத்துச் சென்றவர்கள், அங்கே இருந்த நான்கு அறைகளுள் ஒன்றில் அவர்கள் மூவரையும் பிடித்துத் தள்ளி, வெளியே இழுத்துத் தாழ்ப்பாள் போட்டார்கள். ''பசங்களா, பேசாம படுத்துத் தூங்குங்க. இங்கல்லாம் முழிச்சிக்கிட்டு இருக்கக் கூடாது'' என்றான் அழைத்து வந்தவர்களுள் ஒருவன்.

''சரிங்க'' என்று சமர்த்து போல உள்ளிருந்தபடி குரல் கொடுத்தான் பாலு.

ஐந்து நிமிடங்கள் அவர்கள் பேசக் கூட இல்லை. ஆளுக்கொரு மூலையில் நடுங்கியபடி அமர்ந்திருந்தார்கள். இருட்டில் ஒருவர் முகம் கூட அடுத்தவருக்குத் தெரியவில்லை.

தனது பதற்றத்தை முதலில் தணித்துக் கொண்டு அதன் பிறகு நிதானமாக யோசிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு அமைதியாகச் சில நிமிடங்கள் படுத்து இருந்தான் பாலு.

பாலு எதற்காக அத்தனை பாடுபட்டு அந்தத் தீவுக்கு வந்தான்? அவர்கள் என்ன செய்கிறார்கள். எந்தப் புதையலை எடுக்கப் போகிறார்கள் என்று பார்த்துக் கண்டுபிடித்து, காவல் துறையில் அவர்களைப் பிடித்துக் கொடுப்பதற்குத்தானே? இன்றைக்கு விட்டால் மீண்டும் எப்போது அதற்கான சந்தர்ப்பம் வரும்?வாய்ப்பே இல்லை. எப்படியும் அவர்கள் தம் வேலையைப் பன்னிரண்டு மணிக்குப் பிறகுதான் தொடங்குவார்கள். இன்னும் ஒரு மணி நேர அவகாசம் இருக்கிறது. அதற்குள் இந்த அறையிலிருந்து வெளியேறி, அவர்களைப் பின் தொடர்ந்து ரகசியத்தைக் கண்டுபிடிக்க முடியாதா என்ன?

அவன் தன் இரு நண்பர்களையும் ரகசியக் குரலில் அருகே அழைத்தான்.

'என்னடா?'

''இதோ பாருங்கடா. நாம ஒரு சங்கடத்துல மாட்டிக்கிட்டிருக்கோம். அதுக்காக மனச்சோர்வு அடைஞ்சிடக் கூடாது. கண்டிப்பா இவங்க யாரு என்னன்னு நாம கண்டுபிடிச்சே தீரணும். நம்ம திட்டத்துல எந்தப் பிசகும் இருக்கக் கூடாது'' என்றான் பாலு.

''அதான் எப்படின்னு கேக்கறனே. முதல்ல எப்படி இந்த அறையிலேருந்து வெளிய போறது?'' என்றான் குடுமி.


பாலு மர்மமாகப் புன்னகை செய்தான்.

''வழி தோணிடிச்சு. கிட்டவாங்க. உங்க காதுகளை என் வாய்கிட்ட கொண்டு வந்து வைங்க. சொல்றேன்'' என்றான்.

(தொடரும்)

ராக்கெட்

***சி**ல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியா மற்றும் தாய்லாந்தில் மத விழாக்களின் போது பட்டாசுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. 8 முதல் 10 அடி நீளமுள்ள மூங்கில் குச்சிகளால் இணைக்கப்பட்ட ராக்கெட்டுகள் 40 அடி உயரம் வரை செல்லும் வகையில் அப்போதே இருந்திருக்கின்றன.*



கோகுலம் கேம்





குழந்தைகள் நிறைய விஷயங்களில் பெரியவர்கள் சொன்னதைக் கேட்க மாட்டார்கள். ஆனால் விளையாடச் சொன்னால் மட்டும் என்ன சொன்னாலும் செய்வார்கள். திடீர் என்று ஓர் அபார்ட்மெண்ட்ஸுக்குள் (சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள விக்னேஷ் வில்லா) புகுந்து மூன்று டீமை உருவாக்கி, விதவிதமான விளையாட்டுகளோடு கோகுலம் - கேம் ஷோவை நடத்தினோம். முதல் டீம் அர்விந்த் - காயத்ரி. இரண்டாவது டீம் கணேஷ் - சரண்யா. மூன்றாவது டீம் விவேக் - நித்யா. ''என்ன கேம்ஸ் சொல்லுங்க, அசத்துறோம் பாருங்க'' என்று கட்டை விரலைக் காட்டினார்கள்.

முதல் விளையாட்டை ஆரம்பித்தோம். அது ஞாபக சக்திக்கான போட்டி. தீப்பெட்டி, ஸ்பூன், துப்பாக்கி பொம்மை, கீ செயின் என 16 குட்டிக் குட்டி பொருட்களை 40 நொடிகள் பார்க்கச் சொன்னோம். பிறகு பார்த்தவற்றை, பார்க்காமல் அடுத்த 90 நொடிகளில் எழுதச் சொன்னோம். பேப்பர், பேனாவுக்காக



- ஷோ!

முகில்



டென்ஷன் தொற்றிக் கொள்ள, கடகட என்று எழுதித் தள்ளினார்கள். அதிக பட்சமாக 12 பொருட்களை எழுதி விவேக்- நித்யா டீம் முதலிடத்தில் இருந்தார்கள்.

அடுத்தது பலூன் உடைக்கச் சொன்னோம். ஈசி தானே என்று நினைக்காதீர்கள். பலூனைக் கயிற்றில் கட்டித் தொங்க விட்டுட்டு, குழந்தைகள் கண்களையும் கட்டி விட்டுட்டு, ஒரு கையில் குண்டூசியைக் கொடுத்துட்டோம். மறு கையை உபயோகிக்கக் கூடாது என்று சொல்லி விட்டோம். தட்டுத் தடுமாறி காற்றில் பறக்கிற பலூனைக் கண்டுபிடித்து, அதை ஊசியால் குத்த முடியாமல், திணறினார்கள். அதுவே ஒரு ஸ்பெஷல் டான்ஸ் மாதிரி இருந்தது. எல்லோரும் எப்படியோ பலூனை, 'படார்' ஆக்க, சரண்யாவை மட்டும் பலூன் ஏமாற்றி விட்டது. ஏழே நொடிகளில் பலூனை விவேக் உடைத்ததால் அந்த டீம் இந்த இரண்டாவது சுற்றிலும் முதலிடத்துக்கு வந்தது.







மூன்றாவது சுற்று ஆரம்பமானது. ரொம்பச் சிறியதாக ஒரு குடம். சிறிய பந்து ஒன்று. 1 நிமிடத்தில் இரண்டடி தூரத்திலிருந்து எந்த டீம் அதிகமாக பந்தைப் போடுகிறது என்று போட்டி. பந்து சுலபமாக குடத்துக்குள் போக முடியாமல் படாத

பாடுபட்டது. இந்தச் சுற்றில் திடீர் என்று அர்விந்த் - காயத்ரி டீம் சிலிர்த்தெழுந்து 12 தடவை பந்தை குடத்துக்குள்ளே அனுப்பி, முதலிடத்தைப் பிடித்தது. (அர்விந்த் 9 முறை, காயத்ரி 3 முறை.)

நான்காவது சுற்று ஆரம்பமானது. எல்லோரும் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்று ஆர்வத்தோடு தயாராக இருந்தனர். சுவற்றில் ஒரு குழந்தையின் படத்தை ஒட்டினோம். அவர்களின் கண்களைக் கட்டினோம். கையில் ஸ்டிக்கர் பொட்டைக் கொடுத்து, குழந்தையின் நெற்றியில் சரியாக ஒட்டச் சொன்னோம். பாவம், குழந்தையின் நெற்றியைத் தவிர, மூக்கு, கன்னம், கண், இமை என எங்கெங்கும் பொட்டுகள். பொட்டை ஓரளவு சரியாக நெற்றியில் வைத்த விவேக் - நித்யா டீமும், சரண்யா - கணேஷ் டீமும் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டன.

இறுதிச் சுற்று. எல்லாரும் டென்ஷன் ஆனார்கள். "என்ன பண்ணணும்?" துடிப்போடு கேட்டார்கள். அவர்களை அமைதியாக உட்கார வைத்தோம். நிறையக் கேள்விகள் கேட்டோம். பதில் தமிழில் தான் சொல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன், சொன்னால் நம்ப மாட்டீர்கள். எல்லோரும் ஆங்கில மீடியத்தில் படித்தாலும் நம்ம டீ.வி., வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை விட பல மடங்கு அழகாக தமிழைப் பிழையின்றி பேசினார்கள். (ஒரு சில ஆங்கில வார்த்தைகளைத் தவிர!) டீ.வி என்றால் தொலைக்காட்சி என்று சொல்லத் தெரியாத சரண்யா, 'இது படங்களை, பாடல்களை ஒளி பரப்பும் கருவி' என சமாளித்தது காமெடி. இந்தத் தமிழ்ச் சுற்றில் வென்றது விவேக் - நித்யா டீம்.

எல்லாச் சுற்றுகளையும் சேர்த்து, வெற்றியாளர் யார் என அறிவிக்கப் போவதாகச் சொன்னோம். நகம் கடிக்க ஆரம்பித்தார்கள். "இரண்டாவது இடம் விவேக்- நித்யா, முதலிடம் அர்விந்த் - காயத்ரி" என்றோம்.

அவர்கள் மட்டும் மகிழவில்லை. எல்லோரும் சேர்ந்து மகிழ்ந்தார்கள். துள்ளிக் குதித்தார்கள். ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டார்கள். குழந்தைகளுக்குச் சரிசமமாக மிகவும் ஆர்வத்துடன் அவர்களின் பெற்றோர்களும் பங்கேற்றனர். சிறிது நேரத்தில் மறுநாள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பது நினைவுக்கு வர, குழந்தைகள் சிட்டாகப் பறந்து சென்றனர்.

படங்கள்: **முகில்**

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

செப்டெம்பர் இதழில் அறிவித்த போட்டி சற்றுக் கடினமாக இருந்திருக்கிறது என்பதை அறிய முடிந்தது. சரியான விடை அளித்தவர்களில் இருந்து 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



பரிசு பெற்றவர்கள்:

1. எஸ். சிராஜ் தயாளன், மூன்றாம் வகுப்பு, எஸ். டி. ஏ. ஆங்கில மேல் நிலைப் பள்ளி, கோவில்பட்டி.
2. எஸ்.மெகந்தி பாரதி, ஆறாம் வகுப்பு, ஔவையார்பாளையம்.
3. எம்.பி. முருகன், பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல் நிலைப் பள்ளி, நல்லூர்
4. ஆர். பவித்ரா, ஏழாம் வகுப்பு, திண்டுக்கல்
5. கோ. கௌசிக், ஏழாம் வகுப்பு, கிருஷ்ணசாமி மேல்நிலைப் பள்ளி, சென்னை.

சரியான விடை:

1. நைரோபி
2. ஸ்வாஹிலி, இங்லீஷ்
3. மொம்பாசா, மலிந்தி
4. ஷில்லிங்
5. தேசிய உயிரியல் பூங்கா
6. எகிப்தின் பழைய கொடி

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

சாதித்தார் கும்ப்ளே!

விளையாட்டு உலகம்

ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பை

இங்கிலாந்தில் மினி உலகக் கோப்பை என்று வர்ணிக்கப்படும் ஐசிசி சாம்பியன்ஸ் போட்டிகள் நடைபெற்றன. அரை இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளும் பாகிஸ்தானும் மோதின; இங்கிலாந்தும் ஆஸ்திரேலியாவும் மோதின. இறுதிப் போட்டிக்கு மேற்கிந்தியத் தீவுகளும் இங்கிலாந்தும் தகுதி பெற்றன.

லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் பரபரப்பான இறுதி ஆட்டம் துவங்கியது. முதலில் ஆடிய இங்கிலாந்து 49.4 ஓவர்களில் 217 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தது. எளிய இலக்குடன் ஆடத்துவங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பத்தில் வேகமாக விக்கெட்களை இழந்தது. 8 விக்கெட்டுக்கு 147 ரன்கள் என்ற நிலையில் இயான் பிராட்ஸாவும் கோர்ட்னி பிரௌனும் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடி நிதானமாக விளையாடி 71 ரன்களைச் சேர்த்து, அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. 8 விக்கெட்டை இழந்து 218 ரன்களைச் சேர்த்து கோப்பையைக் கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள்.

1979ஆம் ஆண்டு உலகக் கோப்பை வெற்றிக்கு பின் மேற்கிந்தியத் தீவுகள் அணி பெற்ற பெரிய வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும் ரசிகர்களும் உற்சாக வெள்ளத்தில் மூழ்கினர்.



• அனில் கும்ப்ளே

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே டெஸ்ட் போட்டிகள் இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. பெங்களூரில் நடைபெற்ற முதல் டெஸ்டில், முதல் நாள் ஆட்டத்தில் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார் அனில் கும்ப்ளே. இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்களை வீழ்த்திய இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். 434 விக்கெட்களை எடுத்து கபில் தேவ் முதல் இடத்தில் இருக்கிறார்.

• மகிழ்ச்சியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர்...



தங்கம் வென்றார் அஞ்சு!

சிங்கப்பூரில் ஆசிய தடகள சாம்பியன் போட்டிகள் நடைபெற்றன. இதில் நீளம் தாண்டுதலில் அஞ்சு பாபி ஜார்ஜ் தங்கப் பதக்கம் வென்றார். 6.66 மீட்டர் நீளம் தாண்டி இச் சாதனையைப் படைத்திருக்கிறார் அஞ்சு. ஒலிம்பிக்கில் பதக்கம் பெறாத அஞ்சு அதன் பிறகு டோக்கியோவில் நடைபெற்ற தடகளப் போட்டியிலும் தங்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தீபாவளியை எப்படி கொண்டாடப் போறே?

● எம். ராஜேஷ்வரன்,
மேலத்திருப்பாலக்குடி.

? இந்த வருட தீபாவளியை எப்படி கொண்டாடப் போறே ஜக்கு?

சமீபத்தில் உங்களைப் போன்ற சிறுவர், சிறுமியரைச் சந்தித்தேன். அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது குறிப்பாக ஒரு விஷயம் என் மனதைத் தொட்டது. எல்லோரும் புதுத் துணி, பட்டாசு, இனிப்பு என வழக்கம்போல் கொண்டாடினாலும் ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களுக்குத் தங்களால் முடிந்த சிறு உதவியையாவது பண்டிகையை முன்னிட்டு செய்கிறார்கள் என்பதை அறிந்தேன். எவ்வளவு நல்ல விஷயம்! இதை நாம் எல்லோருமே பின்பற்ற முயற்சி செய்யலாம். பிறருக்குக் கொடுப்பதில் உள்ள சந்தோஷம் வேறு எதிலும் இல்லை. நீங்களும் செய்து பாருங்கள்!

● எல். காசிநாதன், சிவகாசி

? ஜக்கு, நீ ஒரு பொட்டு வெடி கூட வெடிச்சதில்லை என்று சொல்லியிருந்தே. எங்க சிவகாசியில் தான் பட்டாசு செய்யறாங்க. உனக்கு ஒரு பெரிய பார்சல் அனுப்பி வைக்கட்டுமா?

உங்க அன்புக்கு ரொம்ப நன்றி காசி. முதல் கேள்விக்கு சொன்ன பதில்தான் உங்களுக்கும். எனக்கு அனுப்பற பட்டாசுகளை உங்கள் ஊரில் யாருக்காவது கொடுத்து விடுங்கள். உங்களுக்கும் சந்தோஷம்; எனக்கும் சந்தோஷம்.

● என். ஃபிலோமினா மேரி,
காரைக்கால்

? என் மாமா சென்னையில் வசிக்கிறார். விடுமுறையில் நான் சென்னைக்கு வருவதுண்டு. அப்படி வரும்போது கோகுலம் அலுவலகத்துக்கு வரலாமா? உன்னைச் சந்திக்கலாமா ஜக்கு?

உங்கள் கோகுலம் அலுவலகத்துக்கு வருவதற்கு பர்மிஷன் கேட்க வேண்டுமா ஃபிலோமினா? கோகுலம் வாசகர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். நீங்கள் வரும் நேரத்தில் நான் இருந்தால் என்னையும் சந்திக்கலாம்! *(ஜக்கு ரொம்ப பிஸியான ஆளாச்சே!)*

● ஆர். சி. மதன் குமார், குற்றாலம்

? கர்சீப்களைப் பற்றி ஏதாவது சுவாரசியமான தகவல் இருந்தால் சொல்லேன் ஜக்கு. (இது ஒரு கேள்வியா என்று நினைக்க மாட்டாய் என நம்பறேன்.)

கவலைப் படாதீங்க மதன், நல்ல கேள்விதான். மழை, வெயில், பனி போன்றவற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு தலைமேல் போர்த்திக் கொள்ளத்தான் ஆரம்பத்தில் கைக் குட்டைகள் பயன்பட்டன. முதன் முதலில் புல்லால் செய்த பாய்களாக கைக்குட்டைகள் இருந்தன. பிறகு சீனர்கள் பட்டுத் துணி மற்றும் தடிமனான காகிதங்களைக் கைக்குட்டைகளாகப் பயன்படுத்தினர். சணலால் ஆன கைக்குட்டைகளை ரோமானியர்கள் பயன்படுத்தினர். அரச குடும்பத்தினரும்





அன்புள்ள ஜக்கு...

செல்வந்தர்கள் குடும்பத்துப் பெண்களும் கைக்குட்டையை பெருமைக்காக வைத்துக் கொண்டனர். அது விலை மதிப்பு மிக்க பொருளாகவும் கருதப்பட்டது. இரண்டு கைக்குட்டைகள் ஒருவரிடம் இருந்தால் அது மிகப் பெரிய விஷயமாகப் பேசப் பட்டது.

மூக்கைத் துடைத்துக் கொள்ள கைக் குட்டையைப் பயன்படுத்தலாம் என்று ஈரான் மன்னர் பிரடெரிக் தி கிரேட் அறிமுகம் செய்தார். பல வடிவங்களில் புழக்கத்தில் இருந்த கைக்குட்டைகளைச் சதுரமாகத் தான் இருக்க வேண்டும் என்று பிரான்ஸ் மன்னர் 16ஆம் லூயி ஆணை யிட்டார். 1800களுக்குப் பின் கைக் குட்டைகள் சர்வ சாதாரணமாகப் புழக் கத்தில் வந்தன.




● சி. அரவிந்தா, தஞ்சாவூர்

? திருவிழா வாட்ச் முதல் டைட்டன் வாட்ச் வரை விளம்பரங்களில் 10.10 மணியைக் காட்டுகிறதே, ஏன் ஜக்கு?

10.10 நேரம் காட்டுவது நம் பார்வையில் சட்டென்று படுவதற்காகத்தான்! வேறு ஒன்றும் இல்லை. சிறிய முள் பத்திலும் பெரிய முள் இரண்டிலும் இருக்கும் போது எவ்வளவு நன்றாக, பளிச்சென்று தெரிகிறது பாருங்கள்! இந்த இரண்டு முட்களுக்கும் இடையில் 3 எண்கள். இதுபோல் பார்க்க அழகாக வேறு நேரம் அமைவது கடினம்.

குழந்தை விளையாட்டு

அமைப்பு: சச்சின் சித்புர், குல்பர்கா
படம்: பிள்ளை




அக்பர் உத்தரவிட கரும்புக் கட்டு வந்து சேர்ந்தது. பீர்பால் அழுகையை அதிக மாக்கினார்.
கரும்பு வந்தாச்சே ஏன் அழறே?
இப்படி வேண்டாம். துண்டு துண்டாக வேணும்.
அக்பர் கரும்பைத் துண்டு களாக்கித் தந்தார். அப்படியும் பீர்பால் அழுகையைத் தொடர்ந்தார்.
என்னதான் வேணும் உனக்கு?
எனக்கு முழுக் கரும்பு தான் வேணும்.
சரி. வேறொரு கரும்பு தரேன்.
எனக்கு வெட்டிய கரும்புதான் முழுசா வேணும். ஒண்ணா சேருங்க.
ஐயோ! பீர்பால் உன் வாதத்தை ஏத்துக்கறேன்.



ன்னத் தூரிகை
முடிவு

கொக்குகளின் மாநாடு!

அக்டோபர் இதழில் கொக்குகள் என்ற தலைப்பில் போட்டி அறிவித்து இருந்தோம். அதில் பரிசு பெற்றவை இங்கே...



முதல் பரிசு:
எஸ். ராகவேந்திரன்,
பதினோராம் வகுப்பு,
ஆ.மே.நி.பள்ளி, திருவாரூர்




ஆறுதல் பரிசு:
டி.ஸ்நேகா, எட்டாம் வகுப்பு,
தூய மேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கடலூர்



இரண்டாம் பரிசு:
வி. அச்சுதன்,
பதினோராம் வகுப்பு,
கே.பி.மே.நி.பள்ளி,
கடலூர்


மூன்றாம் பரிசு:
பா. ஷாய் ஷங்கர்,
ஏழாம் வகுப்பு, புனித அன்னாள் மே.நி.பள்ளி, சென்னை.





ஆறுதல் பரிசு:
எஸ்.ஜஸ்வந்த்,
சென்னை.

வரைந்து பாருங்கள்





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka